# பகுதி – 2

## 1.1 லால்பகதூர் சாஸ்திரி

> உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
> அச்சாணி அன்னார் உடைத்து.
> – திருக்குறள் (667)

### சிண்டிகேட் (The Syndicate)

நேரு இறந்தவுடன் குல்சாரிலால் நந்தா தற்காலிகப் பிரதமராகப் பொறுப்பேற்றார். எனினும் நேருவுக்கு அடுத்த பிரதமரை முறையாகத் தேர்ந்தெடுக்க வேண்டியிருந்தது. எனவே, காங்கிரஸ் தலைவராயிருந்த காமராஜர் ஒரு உட்குழுவை உருவாக்கினார். அக்குழுவில் அரசியல் செல்வாக்குமிக்க மூத்த காங்கிரஸ்காரர்களான காமராஜர் (சென்னை), அதுல்ய கோஷ் (மேற்கு வங்காளம்), எஸ்.கே.பட்டீல் (பம்பாய்), என்.சஞ்சீவ ரெட்டி (ஆந்திரா), எஸ்.நிஜலிங்கப்பா (மைசூர்) ஆகியோர் இடம் பெற்றனர். இந்த காங்கிரஸ் உட்குழு **'சிண்டிகேட்'** என்று அழைக்கப்பட்டது. அதன் நோக்கம் காங்கிரசுக்குக் கூட்டு தலைமைப் பொறுப்பேற்று, அடுத்த பிரதமர் யார் என்பதை முடிவு செய்வதாகும். இவர்களைப் **'பிராந்திய அதிகார–இடைத்தரகர்கள்'** (Regional Power-Brokers) என்று வர்ணித்துள்ளார் தாரிக் அலி.

பிரதமர் பதவிக்கு குல்சாரிலால் நந்தா, மொரார்ஜி தேசாய், லால் பகதூர் சாஸ்திரி, இந்திரா காந்தி ஆகியோரின் பெயர்கள் பரிசீலிக்கப்பட்டன. தற்காலிகப் பிரதமராயிருந்த நந்தா அவரே பிரதமராக நீடிக்க வேண்டுமென்று விரும்பினார். மொரார்ஜி தேசாய் மூத்த தலைவர் என்ற முறையில் பிரதமர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான வேட்பு மனு தாக்கல் செய்தார். காங்கிரஸ் காரியக் கமிட்டி தேர்தல் மூலம் பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவதை விரும்பவில்லை. பிரதமர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றியது. காங்கிரஸ் நாடாளுமன்றக் கட்சியின் சார்பாகப் பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு காங்கிரஸ் தலைவர் காமராஜரிடம் ஒப்படைக்கப்பட்டது. காமராஜர் காங்கிரஸ் தலைவர்களின் பொதுக் கருத்தறிந்து (Con-sensus) பிரதமர் பதவிக்கு **லால் பகதூர் சாஸ்திரியின்** பெயரைப் பரிந்துரைத்தார். அதைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆமோதித்தது. அதை கட்சிக் கட்டுப்பாட்டுக்குப் பணிந்து தனது வேட்பு மனுவை திரும்ப பெற்றுக் கொண்டார் மொரார்ஜி தேசாய். காங்கிரஸ் கட்சி கட்சி பிளவு படுவது தவிர்க்கப்பட்டது. காங்கிரஸ் **'சிண்டிகேட்'** பொதுக்கருத்தறிந்து பிரதமரை முடிவு செய்யும் மரபை உருவாக்கியது. 1964 ஜூன் 2–ஆம் தேதி லால் பகதூர் சாஸ்திரி போட்டியின்றிப் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேருவுக்குப் பின் பிரதமர் பதவிக்கு சாஸ்திரியைத் தேர்ந்தெடுப்பதற்காக காமராஜர் 'சிண்டிகேட்' கையாண்ட **'பொதுக்கருத்து விதிமுறை'** (Consensus Formula) காங்கிரஸ் கலாச்சாரத்தின் முன்மாதிரியாயிற்று. சாஸ்திரியைப் பிரதமராக்கியதன் மூலம்

காமராஜர் **'தலைவரைத் தீர்மானிப்பவர்'** (King-maker) ஆனார். கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டவரே ஆட்சித் தலைவர் என்ற கருத்து உறுதி செய்யப்பட்டது. அதாவது கட்சித் தலைவர்களால் பிரதமர் பதவியைத் தீர்மானிக்க முடியும் என்பது உணர்த்தப்பட்டது. எனவே, பிரதமர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமின்றிக் கட்சித் தலைவர்களுக்கும் கட்டுப்படவேண்டும் என்பது கோடிட்டுக் காட்டப்பட்டது. அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றில் காங்கிரசின் செல்வாக்கு இருக்க வேண்டும் என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டது. சுருங்கக் கூறின் காங்கிரஸ் கட்சியின் மேலாண்மைக்கு அடங்கியே காங்கிரஸ் அரசாங்கம் செயல்பட வேண்டும் என்ற எண்ணத்தோடும் எதிர்பார்ப்போடும் காங்கிரஸ் சிண்டிகேட் லால் பகதூர் சாஸ்திரியைப் பிரதமராக்கியது.

## உழைப்பால் உயர்ந்தவர்

லால் பகதூர் சாஸ்திரி 1904 அக்டோபர் 2–ஆம் தேதி காசி நகரத்துக்கு அருகாமையில் **முகல்சராய்** என்ற ஊரில் பள்ளி ஆசிரியருக்கு மகனாகப் பிறந்தார். இளவயதில் தந்தையை இழந்த லால் பகதூர் தாய் மாமன் வீட்டில் தங்கிப் படித்தார். உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்போது காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கத்தால் ஈர்க்கப்பட்டார் (1920). தடையை மீறி ஊர்வலம் நடத்த முயன்றதற்காகக் கைது செய்யப்பட்டார்(1921). காசி வித்யா பீடத்தில் நான்காண்டுகள் தத்துவப் பாடத்தில் தேர்ச்சி பெற்று 'சாஸ்திரி' பட்டம் பெற்றார்(1924). நாட்டுப் பற்றுமிக்க லால் பகதூர் சாஸ்திரி சமூக சேவையில் நாட்டங் கொண்டார். 'லோக் சேவா மண்டல்' என்ற அமைப்பில் சேர்ந்தார்(1926). 1927–இல் லலிதா தேவியைத் திருமணம் செய்து கொண்டார். அடுத்த ஆண்டே அலகாபாத் நகர சபைத் தலைவரானார்(1928).

லால் பகதூர் சாஸ்திரி அரசியல் மேடைப் பேச்சாளர். வரி கொடா இயக்கத்தின்போது அலகாபாத் அரசாங்கத்துக்கு எதிராகப் பேசிய குற்றத்துக்காக இரண்டரை ஆண்டுகால சிறை தண்டனை பெற்றார்(1930). பின்னர் அலகாபாத்தில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்(1936). ஜமீன்தாரி முறையின் சீர்கேடுகளை ஆய்வதற்காக நியமிக்கப்பட்ட காங்கிரஸ் குழுவின் அமைப்புச் செயலாளராகவும், உத்தரப் பிரதேச 'பார்லிமெண்ட் போர்டு' தலைவராகவும் பணியாற்றினார். பண்டித கோவிந்த வல்ல பந்த் உ.பி.யின் முதலமைச்சரான போது சாஸ்திரி அவரது அமைச்சரவையில் போலீஸ் மந்திரியானார்(1937). 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றார்(1942). விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மொத்தம் 9 ஆண்டுகள் சிறைவாசம் செய்தவர் சாஸ்திரி!

இந்தியா விடுதலை அடைந்தபின் நேரு காங்கிரஸ் தலைவராக இருந்தபோது லால் பகதூர் சாஸ்திரி பொதுச் செயலாளராக இருந்தார்(1950). 1951–இல் நாடாளுமன்ற மாநிலங்கள் அவை உறுப்பினரானார். நேரு அமைச்சரவையில் இரயில்வே அமைச்சராக சேர்த்துக் கொள்ளப்பட்டார்(1952). இவரது பதவிக் காலத்தில் மூன்றாம் வகுப்புப் பெட்டிகளிலும் மின்விசிறிகள், தூங்க வசதிகள், இடப்பதிவு வசதி முதலிய வசதிகள் செய்யப்பட்டன. சித்தரஞ்சன் இரயில் பெட்டித் தொழிற்சாலை, பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை, விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் தளம் முதலியன தொடங்கப்பட்டன. 1952–இல் அரியலூரில் நிகழ்ந்த இரயில் விபத்துக்குத் தார்மீகப் பொறுப்பேற்று அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். 1957 நாடாளுமன்றத் தேர்தலில் அலகாபாத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட லால் பகதூர் சாஸ்திரி மீண்டும் நேரு

அமைச்சரவையில் இடம் பெற்றார். வர்த்தகம் மற்றும் தொழில் அமைச்சராகவும் (1957–58), உள்துறை அமைச்சராகவும் (1958–59) திறம்படப் பணியாற்றினார். பின்னர் காமராஜர் திட்டப்படி அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணியில் ஈடுபட்டார்(1963).

நேரு நோய்வாய்ப்பட்டதால் அவரது நம்பிக்கைக்கு பாத்திரமான லால் பகதூர் சாஸ்திரி மீண்டும் அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். **'நடைமுறைப் பிரதமராக'** (Defacto Prime Minister)ச் செயல்பட்டார். நேரு இறந்தபின் லால் பகதூர் சாஸ்திரி இந்தியாவின் இரண்டாவது பிரதமராகப் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார். நேருவின் குடும்பப் பின்னணியும், அவரின் ஆளுமையும், அவருக்குக் கட்சியின் மீதிருந்த கட்டுப்பாடும், சர்வதேச அந்தஸ்தும் சாஸ்திரிக்கு இல்லை. எனினும் வறுமையில் பிறந்து வறுமையில் வளர்ந்த சாதாரண மனிதர் தேசப் பற்றாலும், தியாகத்தாலும், உழைப்பாலும் உயர்ந்து நாட்டின் உன்னதமான உயர்பதவியைப் பெறமுடியும் என்பதற்கு லால் பகதூர் சாஸ்திரி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## உறுதியான பிரதமர்

லால் பகதூர் சாஸ்திரி ஒரு பலவீனமான பிரதமராக இருப்பார், கட்சித் தலைமைக்கு கட்டுப்பட்டு நடப்பார், கூட்டுத் தலைமையின் கீழ் ஆட்சி செயல்படும் என்று சிண்டிகேட் தலைவர்கள் எதிர்பார்த்தனர். அவர்களைக் கலந்தாலோசித்தே சாஸ்திரி அரசாங்கத்தை நடத்துவார் என்று நம்பினர். ஆனால் சாஸ்திரி சிண்டிகேட்டின் கைப்பாவையாக இருக்க விரும்பவில்லை. அவர் பிரதமர் பதவிப் பொறுப்பேற்றவுடன் சுதந்திரத்துடன் செயல்படத் துவங்கினார். குட்டையான மனிதர் நெட்டையான முடிவுகளை எடுத்தார். பஞ்சுபோல் மிருதுவாகத் தோன்றினாலும் இரும்புபோல் உறுதியாக இருந்தார். பிரதமர் பதவி பற்றிய மயக்கமோ மருட்சியோ அவருக்கில்லை. பிரதமர் பொறுப்புக்களைப் பற்றி சாஸ்திரி தெளிவாக இருந்தார். அவரது பதவியின் பரிமாணங்களைப் பற்றி நன்கறிந்திருந்தார். நேர்மை, வாய்மை, தூய்மை ஆகியவற்றை வழிகாட்டிகளாகக் கொண்டு கடமையாற்றினார். பிரதமர் பொறுப்பேற்றவுடன் நாட்டு மக்களுக்கு வானொலி மூலம் உரையாற்றிய சாஸ்திரி மகாத்மா காந்திக்கும், பண்டித ஜவஹர்லால் நேருவுக்கும் எழுப்பக்கூடிய பொருத்தமான நினைவுச் சின்னம் 'சுதந்திரமான சுபிட்சமான, வலிமையான இந்தியாவை நிர்மாணிப்பதாகும்' என்று குறிப்பிட்டார். அதன்படி 'நிலையில் திரியாது' நடந்து கொண்டார்.

## சாஸ்திரியின் அமைச்சரவை

பொதுக்கருத்து அடிப்படையில் பிரதமரானார் லால் பகதூர் சாஸ்திரி. பிரதமர் சாஸ்திரி சுதந்திரமாகவும், துணிச்சலுடனும் அவரது அமைச்சரவையை அமைத்தார். பிரதமர் பதவிப் போட்டியில் தோல்வியுற்ற குல்சாரிலால் நந்தாவுக்கு அமைச்சரவையில் பிரதமருக்கு அடுத்த இடம் அளிக்கப்பட்டது. மொரார்ஜி தேசாய் இடம் பெறவில்லை. இந்திரா காந்திக்கு வெளியுறவு இலாகாவைக் கொடுக்காமல் தகவல் தொடர்பு ஒலி பரப்பு அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது. இந்திரா காந்திக்கு வெளியுறவுத்துறை கொடுக்கப்பட்டிருந்தால் ரஷ்யர்களும் இடதுசாரிகளும் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்திருப்பர். அரிஜனத் தலைவர் ஜெகஜீவன் ராமுவுக்கு சாஸ்திரியின் அமைச்சரவையில் இடம் தரவில்லை.

அமைச்சர்களைத் தேர்தெடுப்பதும் அவர்களுக்கு இலாகாக்களை ஒதுக்குவதும் பிரதமரின் சிறப்புரிமை என்ற நாடாளுமன்ற ஜனநாயக நெறியை நிலைநாட்டினார் லால்

பகதூர் சாஸ்திரி. இந்த விஷயத்தில் சாஸ்திரி சிண்டிகேட் தலைவர் காமராஜரைக் கலந்தாலோசிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதே சமயம் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழுபேருக்கு சாஸ்திரி அமைச்சரவையில் இடமளிக்கப்பட்டது. டி.டி.கிருஷ்ணமாச்சாரியும், சி.சுப்பிரமணியமும் 'காபினட்' அமைச்சர்கள். ஓ.வி.அழகேசன் 'ராஜாங்க' அமைச்சர். எஸ்.வி.ராமசுவாமி, டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன், சி.ஆர். பட்டாபிராமன், மரகதம் சந்திரசேகர் ஆகிய நால்வரும் துணை அமைச்சர்கள்.

## புதிய பொருளாதாரக் கொள்கை

### பொருளாதார விளைவுகள்

லால் பகதூர் சாஸ்திரி நேரு வகுத்துக் கொடுத்த 'திட்டமிட்ட பொருளாதாரப் பாதை' யில் செல்ல வேண்டிய கட்டாயத்துக்குட்பட்டிருந்தார். சோஷலிசமே நமது குறிக்கோள் என்று முழங்கினார். எனினும், நேருவுக்கு சோஷலிச சித்தாந்தத்தில் இருந்த ஈர்ப்பும் ஈடுபாடும் சாஸ்திரிக்கு இல்லை. சாஸ்திரியின் உதடு 'சோஷலிசம்' என்ற சொல்லை உச்சரித்தாலும், அவரது உள்ளம் 'முதலாளித்துவ முறை' யில் உறைந்திருந்தது. நேரு ஒரு சிந்தனையாளர். சித்தாந்திர். மாறாக, சாஸ்திரி ஒரு யதார்த்தவாதி. காரியவாதி. நடைமுறை விளைவில் நாட்டம் கொண்டவர். நேரு தூரத்துக் கானகக் காட்சியைக் காண விரும்பியவர். ஆனால், லால் பகதூர் சாஸ்திரி மரங்களைப் பார்க்கத் துடித்தவர். எனவே, லால் பகதூர் சாஸ்திரி சித்தாந்தம் பேசுவதை விடுத்து வறுமை, விலைவாசி, வேலையின்மை, ஏழைகளின் ஏற்றம் பற்றிக் கவலைப்பட்டார். சுருங்கக் கூறின், சாஸ்திரி நேருவைப் போன்று 'சோஷலிச சமுதாய' த்துக்கு முன்னுரிமை கொடுக்கவில்லை.

நேருவின் ஆட்சிக்காலத்தில் ஆர்வத்துடன் நடைமுறைப் படுத்தப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் எதிர்பார்த்த பொருளாதார விளைவுகளைத் தரவில்லை என்பதைக் கண்டார் சாஸ்திரி. எடுத்துக்காட்டாக, ஆண்டு நாட்டு வருமானம் மக்கள் தொகைப் பெருக்கத்துக்கேற்ப உயரவில்லை. விலைவாசி குறையவில்லை. உணவுப்பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. மூன்றாவது திட்டகாலத்தில் சாதனைகள் இலக்குகளுக்கு (Targets) மிகவும் குறைவாக இருந்தன. நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்களின் பயன்களும் திருப்திகரமாக இல்லை. பல திட்டங்கள் நிறைவடையாமல் நின்றன. பொதுத்துறை நிறுவனங்கள் அரசாங்க ஆதரவுடன் 'வெள்ளை யானைகளாக' வளர்ந்து வந்தன. அவற்றோடு வறுமையும் வேலையின்மையும் வளர்ந்தன.

### கிராமப் பொருளாதாரம்

லால் பகதூர் சாஸ்திரி ஒரு முழுமையான காந்தியவாதி. அவர் காந்தியடிகளின் கிராமப் பொருளாதார வளர்ச்சித் திட்டத்தில் நம்பிக்கை உடையவர். உண்மையான இந்தியா கிராமங்களில் உள்ளது என்ற யதார்த்தத்தை உணர்ந்தவர். அரக்க இயந்திரங்களைக் கொண்டு இந்தியாவைத் தொழில்மயமாக்குவதை விரும்பாதவர். வறுமையும் வேலையின்மையும் நிறைந்த நாட்டில் அதிக முதலீடு செய்து, குறைந்த தொழிலாளர்களைக் கொண்டு, காலதாமதமாகப் பயனைத்தரும் பொருளாதாரம் நல்லதல்ல என்று நினைத்தார். எந்திரங்களைக் கொண்டு எந்திரங்களை தயாரிப்பதற்கு முன்னுரிமை கொடுத்தார் நேரு. எந்திரங்களைக் கொண்டு நுகர்வோர் பொருள்களைத் தயாரிப்பதற்கு முக்கியத்துவம் கொடுத்தார் சாஸ்திரி. எனவே, குறைந்த முதலீட்டில் விரைந்த பயனளிக்கக் கூடிய, சிறிய, நடைமுறை சாத்தியமான திட்டங்களைக் கொண்டுவர விரும்பினார். அடித்தட்டு மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய கொள்கைகளையும், திட்டங்களையும் வகுக்க வேண்டியதன்

இன்றியமையாமையை வலியுறுத்தினார். மேடைதோறும் 'ஜெய் ஜவான்', 'ஜெய் கிசான்', 'ஜெய்ஹிந்' என்று முழக்கமிட்டார். சுருங்கக் கூறின், விவசாய வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட கிராமப் பொருளாதாரமே சாஸ்திரியின் அணுகுமுறையின் குவிமையமாக இருந்தது.

### விவசாய வளர்ச்சி

லால் பகதூர் சாஸ்திரி விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுத்தார், 'இந்தியருக்கு கடவுள் ரொட்டி உருவத்தில்தான் காட்சியளிக்க முடியும்' என்ற காந்தியடிகளின் வாக்கை வேதவாக்காகக் கொண்டார் சாஸ்திரி. எனவே, நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் விவசாய வளர்ச்சிக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தார். உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான செயலுத்தி பற்றித் திட்டக் கமிஷனுக்கும் உணவு அமைச்சராயிருந்த சி.சுப்பிரமணியத்துக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டபோது பிரதமர் சாஸ்திரி உணவு அமைச்சர் கரங்களைப் பலப்படுத்தினார். விலைக் கட்டுப்பாடு, கொள்முதல் கட்டுப்பாடு, உணவுப் பொருள் கட்டுப்பாடு மூலம் அரசாங்கத்தின் தலையீட்டை அதிகரிக்க வேண்டும் என்றது திட்டக்கமிஷன். மாறாக, விவசாயிகளுக்கு ஊக்கமளித்து, விவசாயப் பொருள்களுக்கு நியாய விலை நிர்ணயித்து அதிக விளைச்சலைக் கொடுக்கக்கூடிய விஞ்ஞான விவசாய முறைகளைப் பின்பற்றி, விவசாய முதலீட்டை அதிகரித்து, பி.எல்.480 அமெரிக்க தானிய இறக்குமதி செய்து உணவு நெருக்கடியைத் தீர்க்கலாம் என்ற உணவு அமைச்சரின் **'புதிய விவசாயக் கொள்கை'** பிரதமரின் அங்கீகாரத்தைப் பெற்றது. அதனடிப்படையில் 'விவசாய விலைக் கொள்கை' வகுக்கப்பட்டது. இரயில்வே அமைச்சர் எஸ்.கே.பட்டீலை அமெரிக்காவுக்கு அனுப்பி உடனடியாக நான்கு மில்லியன் டன் கோதுமை, மூன்று இலட்சம் டன் அரிசி பெறத் தயங்கவில்லை. சாஸ்திரி கம்யூனிஸ்டுகள் மற்றும் காங்கிரஸ் இடதுசாரிகளின் கடுமையான விமரிசனத்தையும் எதிர்ப்பையும் மீறி புதிய விவசாய வளர்ச்சிக் கொள்கையைத் துணிவுடன் தொடர்ந்தார்.

### தனியார் துறையின் பங்கு

நேருவின் 'கூட்டுப் பொருளாதார' (Mixed Economy)–த்தில் பொதுத்துறை (Public Sector) தொழில் நிறுவனங்களுக்கும், முதலீட்டுக்குமே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அதற்குக் காரணம் 'அந்நிய முதலீடு அந்நிய ஆதிக்கத்தை அதிகரிக்கும்' என்று நேரு கருதியதே ஆகும். மாறாக, சாஸ்திரி வெளிநாட்டு மூலமாகத்தான் விரைவான பொருளாதார வளர்ச்சியைப் பெறமுடியும், அந்நியக் கடன்களைப் பெறும் தகுதியைப் பலப்படுத்திக் கொள்ள இயலும் என்று வாதிட்டார். அரசாங்க பொதுத்துறை நிறுவனங்களிலும் அந்நிய முதலீட்டை ஊக்குவித்தார். பொதுத்துறையில் போடப்படும் பொதுப்பணம் புனித முதலீடாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். கூட்டுப் பொருளாதாரத்தில் தனியார் துறையின் பங்கையும், அந்நிய முதலீட்டுப் பெருக்கத்தையும் ஊக்குவிக்க விரும்பினார் சாஸ்திரி. எனவே லால் பகதூர் சாஸ்திரியை **பொருளாதார தாராளமயக் கொள்கையின் முன்னோடி** என்று கூறுவதில் தவறில்லை.

### திட்டக் கமிஷன் சீரமைப்பு

நேருவின் ஆட்சிக் காலத்தில் திட்டக் கமிஷன் அமைச்சரவைக் குழு (Cabinet) வுக்குப் போட்டி அமைப்பாகச் செயல்பட்டது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்தே நிதி அமைச்சர் ஜான் மத்தாய் ராஜினாமா செய்தார். எனினும் நேரு திட்டக் கமிஷனின்

முக்கியத்துவத்தைக் குறைக்கவில்லை. ஆனால் லால் பகதூர் சாஸ்திரி திட்டக் கமிஷன் அரசாங்கம் என்ற நாயின் வாலாக இருக்க வேண்டும்; வால் நாயை ஆட்டக்கூடாது என்று கருதினார். எனவே, திட்டக் கமிஷனின் அதிகாரத்தையும் ஆதிக்கத்தையும் படிப்படியாகக் குறைத்தார். திட்டச் செலவைப் பாதியாகக் குறைக்க வேண்டும் என்றார். வரி பளுவைக் குறைத்து, நிதிக் கட்டுப்பாட்டை அதிகரிக்க முற்பட்டார்.

திட்டக் கமிஷன் **'அறிவு ஜீவிகளின் பேச்சுக் கூடம்'** என்றார் சாஸ்திரி. சாஸ்திரியின் அணுக்க நண்பரான திரிலோகி நாத்சிங்கை திட்டக் கமிஷனராக்கி தனது எண்ணத்தை நிறைவேற்ற முற்பட்டார். அதே போன்று நிதி நிபுணரான லக்மி காந்த் ஜா–வைத் தனது செயலாளராக நியமித்துக் கொண்டு நிதிக்கட்டுப்பாட்டைக் கொண்டுவர முற்பட்டார். அதுமட்டுமல்ல. திட்டக் கமிஷன் உறுப்பினர்கள் காலக்கெடு எதுவுமின்றி பதவியில் நீடிப்பதை நிறுத்தினார். அமைச்சர்கள் நேரடியாகத் திட்டக் கமிஷனோடு விவாதித்துத் துறைத் திட்டங்களை முடிவு செய்யும் பழக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தார். அமைச்சகங்களுக்கிடையே திட்ட சம்பந்தமான கருத்து வேறுபாடுகள் இருப்பின் அவற்றை அமைச்சரவைக் கூட்டங்களிலேயே பேசித் தீர்த்துக் கொள்ளும் புதிய முறையைக் கொண்டு வந்தார். தேசி ய வளர்ச்சிக் குழு (National Development Council)–வை ஐந்து கமிட்டிகளாகப் பிரித்துத் திட்டக் கமிஷனை மேலும் பலவீனப்படுத்தினார். முதல் முறையாக மாநில முதலமைச்சர்கள் தேசியப் பொருளாதாரக் கொள்கையில் முறையாகப் பங்கேற்பதற்கு வழி செய்தார் லால் பகதூர் சாஸ்திரி.

### மதிப்பீடு

லால் பகதூர் சாஸ்திரி நேருவின் சோஷலிச சமுதாயத்துக்கான திட்டமிட்டப் பொருளாதார வளர்ச்சிக்கு மாற்றுத் திட்டத்தைக் கொண்டுவர முற்பட்டார். கிராமப் பொருளாதாரம், விவசாய வளர்ச்சி, தனியார் துறை மற்றும் அந்நிய முதலீட்டு ஊக்குவிப்பு, திட்டக் கமிஷன் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார். ஆனால் நினைப்பு வேறு நடைமுறை வேறு என்பதை விரைவிலேயே புரிந்து கொண்டார் சாஸ்திரி. நேருவின் சோஷலிசப் பொருளாதாரப் பாதையை விட்டு விலகுவது இயலாத காரியம் என்பதை உணர்ந்தார். 1965 ஜனவரி மாதம் துர்க்காப்பூரில் கூடிய காங்கிரஸ் ஆண்டுக் கூட்டத்தில் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் புதிய பொருளாதார அணுகுமுறை கடுமையாக விமரிசிக்கப்பட்டது. காங்கிரஸ் இடதுசாரிகள் **'சோஷலிசச் செயலுக்கான காங்கிரஸ் பேரவை'** (Congress Forum for Socialist Action) என்ற அமைப்பை ஏற்படுத்திப் புதிய பொருளாதாரக் கொள்கைகளைக் கண்டித்தனர். 'நேருவின் இலட்சியங்கள் நோக்கித் திரும்பவேண்டும்' என்று கோரினர்.

திட்ட விடுமுறை (A Plan Holiday) கொடுக்க விரும்பிய லால் பகதூர் சாஸ்திரி நேரு ஒப்புதல் கொடுத்த நான்காவது ஐந்தாண்டுத்திட்ட வழிகாட்டு நெறிகளை மீறிச்செல்ல அஞ்சினார். சிறு மாற்றங்களுடன் திட்டக்கமிஷன் தீட்டிய நான்காவது திட்டத்தை ஏற்றுக் கொண்டார். திட்டக் கமிஷனின் அதிகாரத்தைக் குறைக்க முற்பட்டு, தேசிய வளர்ச்சிக் குழுவைக் கமிட்டிகளாகப் பிரித்ததன் மூலம் பிரதமர் சாஸ்திரி மாநில முதலமைச்சர்களைச் சார்ந்திருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. 'நேருவுடன் கருத்து வேறுபாடு கொண்ட முதலமைச்சர்கள் திட்டத்தை நிறைவேற்றினர்; ஆனால் சாஸ்திரியுடன் ஒத்துப்போன முதலமைச்சர்கள் திட்டத்தை நிறைவேற்றவில்லை'. என்றார் முன்னாள் உள்துறைச் செயலாளர் எல்.பி.சிங். இந்திரா காந்தி சாஸ்திரியின் பொருளாதாரக் கொள்கையை வெளிப்படையாகவே விமரிசிக்கலானார். இந்தியா–

பாகிஸ்தான் போர் குறுக்கிட்டதாலும், சாஸ்திரி அகால மரணமடைந்ததாலும் அவரது தாராளப் பொருளாதாரக் கொள்கை குறைப்பிரசவமாயிற்று.

## நீதிமன்றம் பெரிதா ? சட்ட மன்றம் பெரிதா ?
(Jidiciary Vs Legislature)

லால் பகதூர் சாஸ்திரியின் ஆட்சிக் காலத்தில் நீதிமன்றத்துக்கும் சட்ட மன்றத்துக்குமிடையே மோதல் ஏற்பட்டது. 1964 அக்டோபர் மாதம் கேஷவ் சிங் என்ற சோஷலிஸ்ட் கட்சி உறுப்பினர் உத்திரப்பிரதேசச் சட்டப்பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டார். அவரை கைது செய்யுமாறு உத்தரவிட்டார் சபாநாயகர். அதற்குக் காரணம் கேஷவ் சிங் சட்டமன்றத்தில் ரௌடித் தனமாக நடந்து கொண்டார் என்பதற்காக 'அவமதிப்பு', மற்றும் 'அவை உரிமை மீறல்' என்று குற்றம் சாட்டப்பட்டதாகும் கேஷவ் சிங் லக்னோவிலிருந்த உயர்நீதிமன்றக் கிளையில் சபாநாயகரின் தீர்ப்பை எதிர்த்து வழக்குப் பதிவு செய்தார்.

வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம் கேஷவ் சிங்குக்குத் தற்காலிக விடுதலை (Interim Bail) அளித்துச் சாபநாயகருக்கு நோட்டீஸ் அனுப்பியது. குற்றவாளியின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு விடுதலை வழங்கியது சட்டப் பேரவையை அவமதித்ததாகும் என்று உ.பி. சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதுமட்டுமல்ல. சம்மந்தப்பட்ட நீதிபதிகள் சட்டப்பேரவைமுன் ஆஜராக வேண்டும் என்ற உத்தரவிட்டார் சபாநாயகர்! 28 நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்றத்தின் 'முழு பெஞ்ச்' சபாநாயகரின் முடிவைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க உத்தரவிட்டது. இந்நீதிமன்ற–சட்டமன்ற மோதல் நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த 'சட்டச் சண்டை' பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்குத் 'தர்ம சங்கடத்தை' ஏற்படுத்தியது. அவர் இத்தகராறை உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்கு விடுமாறு குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணனுக்கு ஆலோசனை கூறினார். வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியானதே என்று கூறியது. உச்சநீதிமன்றத் தீர்ப்பு சம்மந்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டச் சரத்துக்களுக்கு விளக்கமளித்ததோடு குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பு நீதிமன்றத்துக்கு உண்டு என்பதை கோடிட்டுக் காட்டியது.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பு பற்றி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிருப்தியுற்றனர். நீதிமன்றம் சட்டமன்றத்தின் சுதந்திரத்தில் குறுக்கிடுவதாகக் கருதினர். சட்ட அமைச்சர் அசோக் சென் நீதிமன்றத் தீர்ப்பு நாடாளுமன்றம் மற்றும் மாநிலச் சட்டமன்றங்களின் சிறப்புரிமைகளைப் பெரிதும் பாதிப்பதாகக் கூறினார். இத்தகைய நுண்ணயமுடைய விவகாரத்தில் மிகுந்த முன்னெச்சரிக்கையோடும் கட்டுப்பாட்டோடும் இருக்க வேண்டும் என்று கூறி சட்டமன்ற நீதிமன்ற மோதலுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் லால் பகதூர் சாஸ்திரி. நேருவின் ஆட்சிக் காலத்தில் ஜமீன்தாரி ஒழுப்புச் சட்டம் பற்றி பீகார் சட்ட மன்றத்துக்கும் உயர் நீதிமன்றத்துக்குமிடையே மோதல் ஏற்பட்டது. அப்போது கூறினார் நேரு : **"நாம் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மதிப்பளிக்க வேண்டும். அப்படிச் செய்யாவிடில் அது அரசியலமைப்பு முறையின் அடித்தளத்தையே அசைத்துவிடும்"** நேருவின் முன்னுதாரணத்தைப் பின்பற்றினார் சாஸ்திரி.

## இந்தி எதிர்ப்புப் போராட்டம்
## (Anti-Hindi Agitation)

### மொழிக் கொள்கை

மொழி மக்களின் உணர்ச்சி சம்மந்தப்பட்டது. இந்திய விடுதலைப் போராட்டக் காலத்தில் **தேசிய மொழி** (National Language) மற்றும் **ஆட்சி மொழி** (Official Language) பற்றிப் பலத்த சர்ச்சை எழுந்தது. இறுதியில் காங்கிரஸ் சட்டமன்றக் குழு இரண்டாகப் பிரிந்து 78க்கு 77 என்ற வாக்கு வித்தியாசத்தில் இந்திக்கு ஆதரவாக முடிவு செய்தது! இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னர் மொழிப் பிரச்னை அரசிலமைப்புச் சட்டமன்றத்தில் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. அதன்பின் அரசியலமைப்புச் சட்டத்தின் பின்வரும் கருத்துக்கள் இடம் பெற்றன: 1) இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்கும்; 2) ஆங்கிலம் 1965 வரை ஆட்சி மொழியாக நீடிக்கும்; 3) 1965க்குப் பின் ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி ஆட்சி மொழியாகும்; 4) 1965க்குப் பின்னரும் ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக நீட்டிக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்துக்கு உண்டு; 5)தேசிய ஆட்சி மொழி மாநிலங்களுக் கிடையேயான தொடர்பு மொழியாக இருந்த போதிலும் மாநிலத்தின் ஆட்சி மொழியை மாநிலச் சட்டமன்றம் முடிவு செய்யும்.

அரசியலமைப்புச் சட்டகர்த்தாக்கள் எதிர்பார்த்தபடி, 1965க்குள் ஆங்கிலத்துக்குப் பதில் இந்தி தேசிய ஆட்சி மொழியாவதற்கான தகுதியைப் பெறவில்லை! இதற்கு இந்தி வெறியர்களின் அவசரமே காரணம் என்று கூறினார் நேரு. 1955ல் அமைக்கப்பட்ட **'ஆட்சி மொழிக் கமிஷன்'** (Official Language Commission) அதன் அறிக்கையில் (1956) இந்தி படிப்படியாக ஆங்கிலத்துக்குப் பதில் ஆட்சி மொழியாக வேண்டும் என்று பரிந்துரைத்தது. **1960** ஏப்ரல் மாதம் **குடியரசுத் தலைவர் பிறப்பித்த ஆணை** 1965க்குப் பிறகு இந்தி பிரதான ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாகவும் இருக்கும் என்று அறிவித்தது. இந்த ஆணை இந்தி பேசாத மக்களிடையே சந்தேகத்தை ஏற்படுத்தியது. இந்த சந்தேகத்தைப் போக்கும் பொருட்டு **'இந்தி பேசாத மக்கள் ஏற்றுக் கொள்ளும் வரை இந்தி அவர்கள் மீது திணிக்கப்படமாட்டாது'** என்று உத்திரவாதமளித்தார் நேரு. இந்த உத்திரவாதத்தை உள்ளடக்கிய **தேசிய மொழிகள் சட்டம்** (Official Languages Act) 1963ல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் இந்திய மொழிக் கொள்கையைத் தெளிவுபடுத்தியது.

### அமைச்சரக ஆணை

லால் பகதூர் சாஸ்திரி பிரதமரானவுடன் அவரது அமைச்சரவையில் **குல்சாரிலால்** நந்தாவைத் தொடர்ந்து உள்துறை அமைச்சராக வைத்துக் கொண்டார். நந்தா இந்திமொழி ஆட்சி மொழியாக்குவதில் பேரார்வம் கொண்டவர். இந்தி மொழிப் பற்றுடைய சாஸ்திரியும் நந்தாவின் நடவடிக்கைக்கு ஆதரவாக இருந்தார். பிரதமரின் பக்கபலத்தோடு உள்துறை அமைச்சர் குல்சாரிலால் நந்தா இந்தியை ஆட்சி மொழியாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். உள்துறை அமைச்சரகம் ஆட்சிமொழி பற்றி ஒரு ஆணை பிறப்பித்தது. அவ்வாணையில் 1)1965 ஜனவரி 26 குடியரசு தினத்திலிருந்து இந்தி இந்திய யூனியனின் பிரதான ஆட்சி மொழியாக இருக்கும்; 2) மத்திய செயலகத்தில் சில கோப்புகளில் இந்தியில் மட்டும் குறிப்பெழுத வேண்டும்; 3) இந்தி தெரியாதவர்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்பு கொடுக்கப்படும்; 4) இந்தியில் எழுதப்படும் கடிதங்களுக்கு இந்தியில் பதில் எழுத வேண்டும்; 5) அதிகாரபூர்வமான சுற்றறிக்கைகளும், அறிவிப்புகளும் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்படும்.

**எதிர்ப்புப் போராட்டம்**

இந்தியை ஆட்சி மொழியாக்குவது பற்றிய மத்திய உள்துறை அமைச்சரக ஆணை குளவிக் கூட்டில் கைவிட்டது போலாயிற்று. அந்த ஆணை நேருவின் வாக்குறுதியை மீறியது. ''தென்னாட்டு மக்கள் தாமாக விரும்பாதவரை இந்தி அவர்கள் மீது திணிக்கப்படாது'' என்பதே நேரு கொடுத்த வாக்குறுதியாகும். தமிழ் நாட்டில் மத்திய அரசின் 'இந்தி மொழித் திணி'ப்பால் மனக் கொதிப்படைந்த திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க) இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் துவக்கியது. 1965 ஜனவரி 8–ஆம் தேதி சென்னை 'அறிவக'த்தில் கூடிய தி.மு.க. தலைமைச் செயற்குழு முக்கிய முடிவெடுத்தது. அதன்படி 1) 1965 ஜனவரி 26–ஆம் நாளாகிய குடியரசு தினம் 'துக்க நாளாக' அனுசரிக்கப்படும்; 2) எல்லா ஊர்களிலும் கண்டனக் கூட்டங்கள் நடத்தல்; 3) துக்க நாளின் அறிகுறியாக கறுப்புக் கொடிகள் காட்டுவது, கறுப்புச் சின்னம் அணிவது.

சென்னை மாநில முதலமைச்சராயிருந்த எம்.பக்தவத்சலம் தி.மு.க. துவக்கத் திட்டமிட்டிருந்த இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தை முளையிலேயே கிள்ளிவிடத் திட்டமிட்டார். 1965 ஜனவரி 25–ஆம் தேதி நள்ளிரவில் தி.மு.க. தலைவர் சி.என்.அண்ணாத்துரை கைது செய்யப்பட்டார். பின்னர் தி.மு.க.வின் முன்னணித் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். தமிழ்நாடு முழுவதும் மாணவர்கள் இந்தித் திணிப்புக்கு எதிராக கண்டன ஊர்வலங்களை நடத்தினர். குறிப்பாக சென்னையில் அனைத்துக் கல்லூரி மாணவர்களும் நேப்பியர் பூங்காத்திடலில் கூடி, ஊர்வலமாகத் தலைமைச் செயலகம் சென்று முதலமைச்சரிடம் மனு கொடுக்க முயன்றனர். ஆனால் முதலமைச்சர் எம்.பக்தவத்சலம் மாணவர்களை சந்திக்க மறுத்தார். அதுமட்டுமல்ல மாணவர்களைக் கலைக்குமாறு போலீசுக்கு உத்தரவிட்டார். போலீசார் நடத்திய தடியடியாலும், கண்ணீர்புகை குண்டு வெடிப்பாலும் பல மாணவர்கள் காயமடைந்தனர். அதன்விளைவாக மாணவர் போராட்டம் மாநிலம் முழுவதும் காட்டுத்தீ போலப் பரவியது. வன்முறை வெடித்தது. முதலமைச்சரின் அரசியல் விவேகமற்ற செயலால் இந்தி எதிர்ப்புப் போராட்டம் கிளர்ச்சியாயிற்று.

இந்தியாவின் 15–வது குடியரசு நாள் தமிழ்நாட்டில் துக்க நாளாகக் கொண்டாடப்பட்டது. அதைத் தொடர்ந்து போராட்டம் தீவிரமடைந்தது. மதுரையில் மாணவர்கள் ஊர்வலமாகச் சென்றபோது தாக்கப்பட்டனர். திருச்சி சின்னச்சாமி, கோடம்பாக்கம் சிவலிங்கம், விருகம்பாக்கம் அரங்கநாதன் போன்றோர் தீக்குளித்து உயிர்த் தியாகம் செய்தனர். டாக்டர் சி.இலக்குவனார் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்கு மாணவர்களைத் தூண்டிவிட்டார் என்று குற்றம் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டார் (1965 ஜனவரி 1) ரயில்கள் நிறுத்தப்பட்டன. ரயில் நிலையப் பலகைகளில் உள்ள இந்தி எழுத்துக்கள் அழிக்கப்பட்டன. பேருந்துகள் கொளுத்தப்பட்டன. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன. மேலும் சில இளைஞர்கள் உயிர்த்தியாகம் செய்தனர். திருப்பூரில் ஒரு சப்–இன்ஸ்பெக்டரும் சில காவலர்களும் உயிருடன் எரிக்கப்பட்டனர். மத்திய அரசாங்கத்தின் இந்திக் கொள்கையை எதிர்த்து அமைச்சர்கள் சி.சுப்பிரமணியமும், ஓ.வி.அழகேசனும் ராஜினாமா செய்தனர்

**12.7.4. போராட்டம் பரவியது**

இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ் நாட்டில் மட்டுமின்றிப் பிற மாநிலங்களிலும் நடத்தப்பட்டது. மைசூரில் மாணவர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்து ஊர்வலங்கள் நடத்தினர். உண்ணாவிரதம் இருந்தனர். முதலமைச்சரிடம் மனு கொடுத்தனர்.

ஆந்திராவில் ஐதராபாத், விசாகப்பட்டினம், திருப்பதி, மதனப்பள்ளி, சித்தூர், அனந்தப்பூர் போன்ற இடங்களில் மாணவ ஆர்ப்பாட்டக்காரர்கள் தடியடிக்கும், கண்ணீர்ப்புகை குண்டுத் தாக்குதலுக்கும் இலக்காயினர். நெல்லூரில் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டில் இருவர் மாண்டனர். பலர் காயமடைந்தனர். கேரளாவில் மாணவர்கள் ஊர்வலம் சென்றனர். உண்ணாவிரதம் இருந்தனர். பத்திரிக்கையாளர்கள் மறியல் செய்தனர். மேற்கு வங்கத்தில் ஒரு வார காலத்துக்கு இந்தி எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

### தீர்வு

மத்திய அரசின் இந்திக் கொள்கையைப் பற்றிப் பல அறிஞர்கள் கண்டனம் தெரிவித்தனர். நேருவின் உறுதிமொழிக்குச் சட்ட வடிவம் தரப்படாவிடில் இந்தியா பல பகுதிகளாகச் சிதறிவிடும் என்று பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கங்கள் எச்சரித்தன. யாவற்றுக்கும் மேலாகக் குடியரசுத் தலைவர்டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் பிரதமர் சாஸ்திரிக்கு எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தினார். “குடியரசுத் தலைவர் பிரதமரின் ஆலோசனைப்படி நடக்க வேண்டும். ஆனால் நெருக்கடியான நேரத்தில் பிரதமரை எச்சரிக்க வேண்டியது குடியரசுத் தலைவரின் கடமையாகும். தேசிய நலன் கருதி பிரதமர் மற்றும் அவரது அமைச்சரவை முடிவுகள் மீது குடியரசுத் தலைவர் தனது செல்வாக்கைப் பிரயோகிக்கலாம்'' என்று கூறுகிறார் குப்தீப் நய்யார். எனவே, சர்ச்சைக்குரிய உள்துறை அதிகாரி இந்திமொழி பற்றிப் பிறப்பித்த ஆணை திரும்பப் பெறப்பட்டது. இந்தித் திணிப்பு முயற்சி கைவிடப்பட்டது. பிரதமர் சாஸ்திரி நேருவின் வாக்குறுதியைப் பின்பற்றுவதென உறுதி கூறினார். இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெற்றி பெற்றது. மத்திய மாநிலத் தலைவர்களின் விவேகமற்ற முடிவாலும், பேச்சாலும், போக்காலும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊனம் ஏற்பட்டது. தமிழ் நாட்டில் காங்கிரஸ் ஆட்சி மக்களின் செல்வாக்கை இழந்தது. 1967 தேர்தலில் காமராஜர் தனது சொந்தத் தொகுதியிலேயே தோற்றார். தி.மு.க. ஆட்சியைப் பிடித்தது.

### நாகர்களுடன் உடன்பாடு

இந்தியாவின் 16–வது மாநிலமான நாகலாந்து வன்முறைக் கிளர்ச்சிக்காடாக இருந்து வந்தது. நாகலாந்து தனி மாநிலமாக அமைக்கப்பட்ட பின்னரும் அது வெளிவிவகார அமைச்சகத்தின்கீழ் இருந்தது. அதை நாகர்கள் விரும்பவில்லை. மேலும் அவர்கள் பிஸோ (A.Zapu Phizo)–வின் தலைமையின் கீழ் சுதந்திர நாகலாந்து அரசாங்கத்தை அமைக்க முயன்றனர். அம்முயற்சிக்கு வெளிநாட்டு சமயப் பரப்பாளர்கள் ஆதரவு அளித்து வந்தனர். நேருவின் ஆட்சிக்காலத்தில் நாகலாந்தில் வன்முறைக் கலவரங்களை அடக்க முடியவில்லை.

லால் பகதூர் சாஸ்திரி பிரதமரானவுடன் மைக்கேல் ஸ்காட் (Michael Scott) என்ற வெளிநாட்டு சமயப் பரப்பூழியரும், ஜெயப்பிரகாஷ் நாராயணனும், அப்போது அஸ்ஸாம் முதலமைச்சராயிருந்த பி.பி.சக்ளாவும் மத்திய அரசாங்கம் தலைமறைவு நாகர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் தற்காலிகப் போர் நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்தனர். அந்த ஏற்பாட்டைப் பிரதமர் சாஸ்திரி ஏற்றுக் கொண்டார். அதன் பின்னர் நாகலாந்து வெளிவிவகாரத் துறையின் கீழ் இருந்து வந்த முரண்பாட்டை நீக்கினார் சாஸ்திரி. நாகர்களுடன் ஏற்பட்ட உடன்பாடு குறிப்பிடத்தக்கது.

## வெளியுறவுக் கொள்கை

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை லால் பகதூர் சாஸ்திரி நேரு வகுத்த வழியிலேயே சென்றார். எனினும் உலக நாடுகளுக்கிடையே ஏற்பட்டு வந்த மாற்றங்களுக்கேற்ப இந்திய வெளியுறவுக் கொள்கையிலும் நடத்தையிலும் தேவையான மாற்றங்களைத் துணிவுடன் மேற்கொண்டார் சாஸ்திரி. கெய்ரோ(Cairo)—வில் நடைபெற்ற இரண்டாவது அணிசேரா நாடுகளின் உச்ச மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி(1964 அக்டோபர் 5) அமெரிக்காவைக்குறை கூறுவதைக் குறைத்துக் கொண்டார். இது நேருவின் அணுகுமுறைக்குச் சற்றே மாறுபட்டதாகும். அணிசேரா நாடுகளின் உதவியால் மட்டும் இந்தியாவுக்குப் பாதுகாப்பு உத்திரவாதமில்லை என்பதை உணர்ந்த சாஸ்திரி கெய்ரோவிலிருந்து இந்தியா திரும்பியவுடன் வல்லரசு நாடுகளிடமிருந்து அணு ஆயுதக் குடை (Nuclear Umbrella)ப் பாதுகாப்பைக் கோரினார். சாஸ்திரியின் அணுக்குடைக் கோரிக்கை நேருவின் கூட்டுசேராக் கொள்கைக்கு மாறுபட்டதாகும். நேருவின் கொள்கை அவரது ஆழ்ந்த நம்பிக்கையின் விளைவு சாஸ்திரியின் அணுகுமுறை யதார்த்தத்தின் வெளிப்பாடு.

பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் ஆட்சிக் காலத்தில் இந்திய—அமெரிக்க உறவில் ஏற்ற இறக்கங்கள் இருந்தன. அமெரிக்க அதிபர் லிண்டன் ஜான்சன் இந்திய ஆதரவுக் கொள்கையைப் பின்பற்றியதால் தாரப்பூர் அணுசக்தி நிலையத்துக்கு வளமிக்க யுரேனிய எரிசக்தி தடையின்றி கிடைத்தது. அதேபோன்று உணவு உதவியும் வந்தது. எனினும் வியட்நாம் போரும், இந்திய—பாகிஸ்தான் போரும் இந்திய—அமெரிக்க நல்லுறவைப் பாதித்தன. சாஸ்திரி அமெரிக்க ஆதரவாளராக இருப்பாரோ என்ற சந்தேகம் ரஷ்யாவுக்கு இருந்தது. பின்னர் வடக்கு வியட்நாமைக் குண்டு வீசித் தாக்கியதற்காக அமெரிக்காவைக் கடுமையாகக் கண்டித்த இந்தியா மீது ரஷ்யாவுக்கு நம்பிக்கை ஏற்பட்டது.

சாஸ்திரி நேருவின் அணுகுமுறையிலிருந்து விலகி அனைத்து கிழக்காசிய நாடுகளுடனும் அணிவேறுபாடின்றிச் சமநட்புறவு கொள்வதில் நாட்டம் கொண்டார் சாஸ்திரி அண்டை நாடுகளுடனான நல்லுறவைப் பலப்படுத்துவதில் முனைப்புடன் செயல்பட்டார். அண்டை நாடுகளுக்கு வெளியுறவு அமைச்சர் சுவரண் சிங்கை அனுப்பினார். ஸ்ரீலங்காவுக்கும் நேபாளத்துக்கும் தக்க இந்திய தூதுவர்களை நியமித்தார். குறிப்பாக பிரதமர் சாஸ்திரி ஸ்ரீலங்காவுக்குப் பயணம் செய்து கால் நூற்றாண்டு காலமாகக் தீர்க்கப்படாமலிருந்த இலங்கைவாழ் இந்தியா வம்சாவளியினர் பிரச்னைக்குத் தீர்வு கண்டார்.

## இந்திய—பாகிஸ்தான் போர், 1965

### கட்ச் போர் (War of Katch)

கட்ச் பகுதி குஜராத்தில் உள்ளது. கட்சிலுள்ள ரான் (Rann of Katch) ஆண்டில் ஏழு மாதங்கள் ஆட்கள் நடமாடமுடியாத சேற்று சதுப்பு நிலப்பகுதியாக இருக்கும். அப்பகுதிக்குள் 1965 ஏப்ரல் 9—ஆம் தேதி பாகிஸ்தான் படையினர் ஊடுருவிச் சென்றனர். இந்திய எல்லைக்குள் இராணுவம் செல்லுவதற்கான பாதையைப் போட்டனர். 'சர்தார் காவல் சாவடி' (Sardar Post) மீது வெடிகுண்டு தாக்குதல் நடத்தினர். இந்திய படை எதிர்த்தாக்குதல் நடத்தியது. அதில் 34 பாகிஸ்தான் வீரர்களும், 2 இந்திய வீரர்களும் கொல்லப்பட்டனர். பின்வாங்கிய பாகிஸ்தான் படை மற்றொரு இடத்தில் இருந்த விக்கோட் சாவடி (Vigkot Post) மீது மின்னல் தாக்குதல் நடத்திக் கைப்பற்றியது. இந்திய இராணுவம் பாகிஸ்தான் ஊடுறுவலை எதிர் கொண்டது.

பாகிஸ்தான் படையின் கட்ச் ரான் ஊடுறுவலை முறியடிப்பது பற்றி இந்திய அரசியல் தலைமைக்கும் இராணுவத் தலைமைக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. அதேபோன்று விமானப் படைக்குடை (Air Cover)ப் பாதுகாப்பு கொடுப்பது பற்றி இந்தியத்தரைப்படைத் தளபதி ஜே.என்.சௌத்திரிக்கும், விமானப்படைத் தளபதி ஏர் மார்ஷல் அர்ஜின் சிங்குக்குமிடையே கருத்தொற்றுமை ஏற்படவில்லை. பிரதமர் சாஸ்திரி இருதலைக் கொள்ளி எறும்பானார். சாஸ்திரியின் உறுதியின்மையை மொரார்ஜி தேசாய், பட்டீல், கிருஷ்ண மேனன், விஜயலட்சுமி பண்டிட், அதுல்ய கோஷ் போன்றோர் குறை கூறினர்.

பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி பாகிஸ்தானுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ள விரும்பினார். ஆனால் பாகிஸ்தான் அதற்குத் தயாராக இல்லை. அந்த சமயத்தில் பிரிட்டிஷ் பிரதமர் ஹெரால்டு வில்சன் தலையீட்டால் இரு காமன்வெல்த் நாடுகளுக்கிடையேயான 'கட்ச் போர்' முடிவுக்கு வந்தது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான ஒரு போர் நிறுத்த ஒப்பந்தம் இலண்டனில் கையெழுத்தாயிற்று. அதன்படி 1) கட்ச் பகுதியில் உடனடியாகப் போர் நிறுத்தம் செய்ய வேண்டும். 2) கட்ச் தகராறைத் தீர்க்க ஒரு நடுவர் மன்ற (a Tribunal)—த்தை ஏற்படுத்தல். 3) இரு தரப்பாரும் நடுவர் மன்றத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நடுவர் மன்றத்தில் இந்தியாவால் நியமிக்கப்பட்ட யூகோஸ்லாவிய அலெஸ் பெப்லர் (Ales Bebler) பாகிஸ்தான் பிரதிநிதி இரானிய நஸ்ருல்லா என்டெசியம் (Nasrulla Entezeam), ஐ.நா.தலைமைச் செயலரால் நியமிக்கப்பட்ட சுவீடஷ் குன்னர் கெர்கன் (Gunner LaGergun) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். ஸ்வீடிஷ் பிரதிநிதி நடுவர் மன்றத் தலைவர். பாகிஸ்தான் பிரதிநிதி 87,500 சதுர கிலோ மீட்டர் கட்ச் ரன் பகுதி தங்களைச் சேர வேண்டுமென்று கோரினார். அதை நடுவர் மன்றத் தலைவர் ஆதரித்தார். இறுதியில் இந்தியா பாகிஸ்தானுக்கு 800 சதுர கிலோ மீட்டர் நிலத்தை விட்டுக் கொடுத்தது. பாகிஸ்தான் கேட்டதில் 9.43 சதவிகித நிலத்தைத்தானே கொடுத்தோம் என்று இந்தியா சமாதானமடைந்தது.

போர் நிறுத்த ஒப்பந்தமும், நடுவர் மன்றத் தீர்ப்பும் கடுமையான விமரிசனத்துக்குள்ளாயின. ஆக்கிரமித்த நாட்டையும் ஆக்கிரமிக்கப்பட்ட நாட்டையும் சமமாகக் கருதி ஒப்பந்தம் கண்டனத்துக்குள்ளாயிற்று. அதேபோன்று இந்தியப் பகுதியைப் பாகிஸ்தானுக்குக் கொடுக்கக் காரணமாக இருந்த தீர்ப்பும் நிபந்தனைக்குள்ளாயிற்று. ஜன சங்கமும், சோஷலிஸ்ட் கட்சியும் இவற்றை ஏற்க மறுத்தன. குறிப்பாக, ஜனசங்கத் தலைவர் அடல் பிகாரி வாஜ்பாய் கட்ச் போர் நிறுத்த ஒப்பந்தமும் உடன்பாடும் 'இந்திய கவுரவத்துக்கு இழுக்கு' என்றும், பிரதமர் சாஸ்திரி பதவி விலக வேண்டும் என்றும் கோரினார்.

### காஷ்மீர்ப் படையெடுப்பு

கட்ச் ஊடுறுவல் பாகிஸ்தானின் திசைதிருப்பும் செயலுத்தி என்பது விரைவிலேயே வெளிப்பட்டது. கட்ச் போர் நிறுத்த ஒப்பந்தம் பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கும்போதே பாகிஸ்தான் காஷ்மீர் மீது படையெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தது. கட்ச் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட உடனேயே காஷ்மீர்ப் பிரச்னைக்கு 'உடனடியான இறுதித் தீர்வு' காணப்பட வேண்டும் என்றார் பாகிஸ்தான் அதிபர் தளபதி அயூப்கான். கட்ச் நோயின் அறிகுறி, காஷ்மீர்தான் நோய் என்றார் அவர் பாகிஸ்தான் காஷ்மீரில் சதிவேலைகளில் இறங்கியது. பயிற்சி பெற்ற

நூற்றுக்கணக்கானோர் காஷ்மீருக்குள் ஊடுருவினர். அவர்களை **'முஜாகித்கள்'** அல்லது விடுவிப்பாளர்கள் (Liberators) என்று வர்ணித்தார் பாகிஸ்தான் வெளிவிவகாரத் துறை அமைச்சராயிருந்த கல்பிகர் அலி புட்டோ. பாகிஸ்தானின் ஊடுருவல்காரர்கள் ஹஜிபீர் மற்றும் டித்வால் பகுதிகளைப் பிடித்துக் கொண்டனர். காஷ்மீரைக் கட்டாயமாகக் கைப்பற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் 1965 ஆகஸ்ட் 5–ஆம் தேதி அறிவிக்கப்படாப் போரைத் துவக்கியது பாகிஸ்தான். அதுவரை தயக்கம் காட்டிய பிரதமர் சாஸ்திரி பாகிஸ்தானின் இராணுவத் தாக்குதலை முறியடிக்க இராணுவத்துக்கு உத்தரவிட்டார்.

தயார் நிலையிலிருந்த இந்திய இராணுவம் காஷ்மீருக்குள் விரைந்து சென்று ஊடுருவல்காரர்களை எதிர் கொண்டது. காஷ்மீரின் எல்லைகள் மூடப்பட்டன. பாகிஸ்தான் படை சாம் (Chham) பகுதியிலிருந்த இந்திய இராணுவத் தளங்களைத் தாக்கியது (1965) செப்டம்பர் 1). இந்தியா பாகிஸ்தானுக்கு எதிரான தாக்குதலைத் தீவிரப்படுத்தியது. **'சல்லடை நடவடிக்கை'** (Operation Riddle) எடுக்கப்பட்டது. இந்தியப் படை இந்திய–பாகிஸ்தான் எல்லையைத் தாண்டிப் பாகிஸ்தானுக்குள் நுழைந்தது. லாகூர் மற்றும் சியால்கோட் பகுதிகளில் மும்முனைத் தாக்குதலைத் துவக்கியது. இந்தியா–பாகிஸ்தானுக்கிடையே ஏற்பட்ட 'அறிவிக்கப்படா போர்' 1965 செப்டம்பர் 25–ஆம் தேதி வரை தொடர்ந்தது. பாகிஸ்தான் பகுதியைக் கைப்பற்றிக் கொண்டு பின் அதற்கு பதில் பாகிஸ்தான் கைப்பற்றிய காஷ்மீர்ப் பகுதியைத் திரும்பப் பெற வேண்டும் என்பது பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் விருப்பம். இப்போரில் பலத்த சேதமடைந்த பாகிஸ்தான் சமரசம் செய்து கொள்ளச் சம்மதித்தது.

நிலைமை மேலும் மோசமடையாமல் தடுக்க ஐ.நா. பாதுகாப்பு அவை போரை நிறுத்துமாறு இந்தியாவையும் பாகிஸ்தானையும் கேட்டுக் கொண்டது. ஐ.நா.வின் தலைமைச் செயலர் உதாண்ட் (Uthant) மேற்கொண்ட சமரச முயற்சியின் விளைவாக இருநாடுகளுக்குமிடையே போர் நிறுத்தம் ஏற்பட்டது. பிரதமர் சாஸ்திரி உதாண்டிடம் 3 நிபந்தனைகளை விதித்தார் : 1) போரைத் துவங்கியதற்குப் பாகிஸ்தான் பொறுப்பேற்க வேண்டும்; 2) பாகிஸ்தான் ஊடுருவல்காரர்களைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்; 3) திரும்பவும் ஊடுருவலோ அல்லது படையெடுப்போ செய்வதில்லை என்று பாகிஸ்தான் உத்திரவாதம் அளிக்க வேண்டும். 1965 செப்டம்பர் 20ஆம் தேதி ஐ.நா. பாதுகாப்பு அவை ஒருமனதாக நிறைவேற்றிய தீர்மானம் இந்தியாவும் பாகிஸ்தானும் தங்கள் படைகளை 1965 ஆகஸ்ட் 5–ஆம் தேதி இருந்த நிலைக்குத் திரும்பச் செல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டது இருவார இந்திய–பாகிஸ்தான் எல்லைப்போர் 'டிராவில்' முடிந்தது. புதுடெல்லியும் ராவல்பிண்டியும் முறையே வெற்றி பெற்றதாகக் கூறிக்கொண்டன.

**தாஷ்கண்ட் பிரகடனம் (Dashkent Declaration), 1966**

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே துவங்கிய போர் முடிந்தது. ஆனால் போர் அபாயம் நீங்கவில்லை. பாகிஸ்தான் போர் நிறுத்த விதிகளை மீறிக் கொண்டிருந்தது. இந்தியாவுக்கு எதிராகத் துவேஷப்பிரச்சாரம் செய்தது. **ரஷ்யப் பிரதமர் கோசிஜின்** (Kosygin) இவ்விரு நாடுகளுக்கிடையே சமரசம் செய்ய முன்வந்தார். இந்திய பாகிஸ்தான் பிரதமர்களை சோவியத் யூனியனில் உள்ள **தாஷ்கண்ட்** (Tashkent) என்ற இடத்தில் சந்தித்துப்பேச அழைப்பு விடுத்தார். அவ்வழைப்பை ஏற்று இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியும் பாகிஸ்தான் அதிபர் அயூப் கானும் 1966 ஜனவரி 4–ஆம் தேதியிலிருந்து 10 வரை தாஷ்கண்ட்டில் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்பேச்சு வார்த்தையின் முடிவில் **'தாஷ்கண்ட் பிரகடனம்'** வெளியிடப்பட்டது. அதன் **முக்கிய அம்சங்கள்** வருமாறு:

1. இந்தியாவும் பாகிஸ்தானும் நல்லுறவை உருவாக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளல்.

2. ஐ.நா. சாசனத்தில் கூறப்பட்டுள்ளவாறு தங்களுக்குள்ள தகராறுகளை அமைதியாகத் தீர்த்துக் கொள்ளல்.

3. இருநாட்டுப் படையினரும் 1965 ஆகஸ்டு 5–ஆம் தேதிக்கு முன்பிருந்த நிலைகளுக்குத் திரும்ப வேண்டும். அதை 1966 பிப்ரவரி 25 ஆம் தேதிக்குள் முடிக்க வேண்டும். இருதரப்பாரும் போர் நிறுத்த விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

4. இருநாடுகளும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது என்ற அடிப்படையில் இருதரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

5. ஒரு நாடு மற்றொரு நாட்டுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யலாகாது.

6. இருநாட்டு ஹை கமிஷனர்களும் அவரவர் இடங்களுக்குச் சென்று இரு நாடுகளுக்கிடையே சுமுகமான ராஜதந்திர உறவுகளை மீண்டும் தொடர வேண்டும்.

7. இருநாடுகளும் பொருளாதார வர்த்தகத் தொடர்புகளையும், செய்தித் தகவல் தொடர்பையும் கலாச்சாரப் பரிவர்த்தனைகளையும் மீட்பதோடு நடைமுறை உடன்பாடுகளையும் நிறைவேற்ற வேண்டும்.

8. போர் கைதிகளைப் பரிவர்த்தனை செய்து கொள்வது பற்றி உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்.

9. இருதரப்பாரும் மக்கள் குடிபெயர்வு, அகதிகள் பிரச்னை, சட்டப் புறம்பாகக் குடியேறியோர், போரின்போது கைப்பற்றப்பட்ட சொத்துக்களைத் திருப்பித்தரல் போன்ற பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான பேச்சு வார்த்தை நடத்த உரிய நடவடிக்கைகள் எடுத்தல்.

10. இந்தியாவும் பாகிஸ்தானும் தங்களுக்கிடையேயுள்ள பரஸ்பர விவகாரங்களை அனைத்து நிலைகளிலும் பேசித் தீர்வு காண வேண்டும்.

தாஷ்கண்ட் அமைதி உடன்படிக்கை பெரிதும் பாராட்டப் பட்டது. 'தாஷ்கண்ட் பிரகடனம் கூட்டுசேராக் கொள்கையைப் பின்பற்றும் அரசாங்கத்துக்கும், இரு இராணுவக் கூட்டுகளோடு உறவு கொண்டுள்ள அரசாங்கத்துக்குமிடையே செய்து கொள்ளப்பட்டுள்ள தனித்தன்மையுடைய ராஜதந்திரம்' என்று கருதினார் லால் பகதூர் சாஸ்திரி. இப்பிரகடனம் 'பொதுமக்களுக்கு கிடைத்த வெற்றி' என்றார் அயூப் கான். 'இந்திய–பாகிஸ்தான் உறவு வளர்ச்சியின் புதிய பரிமாணம்' என்று கூறினார் கோசிஜின்.

பொதுவாகத் தாஷ்கண்ட் பிரகடனத்தை இந்தியர்கள் வரவேற்றனர். எனினும், தாஷ்கண்ட் உடன்பாடு காஷ்மீர்ப் பிரச்னை பற்றிய பாகிஸ்தான் – இந்திய நிலைகளில் எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. பிரதமர் சாஸ்திரி சம பகுதியைப் பெற்றுக் கொண்டு ஹாஜியூரைத் திருப்பிக் கொடுக்க சம்மதித்தார். ஆனால் பாகிஸ்தான் வசமிருந்த காஷ்மீர்ப் பகுதியை மீட்கவில்லை. எனவே, இந்தியத் தலைவர்கள் ஏமாற்றமடைந்தனர். இந்திய இராணுவ வீரர்கள் பெற்றுத்தந்த வெற்றி பறிபோய்விட்டதாகக் கருதினர். காங்கிரஸ் கட்சியில் ஒரு பகுதியினரும் சாஸ்திரியோடு இருந்த மூத்த தலைவர்கள் சிலரும் தாஷ்கண்ட் ஒப்பந்தத்தை ஏற்கவில்லை. அதேபோன்று தாஷ்கண்ட் சமாதானம் அயூப்கான் தேடித்தந்த அவமானம் என்று பாகிஸ்தானியர்

கருதினர். அங்கு இராணுவ ஆட்சி செல்வாக்கு இழந்தது. நேருவுக்குப் பின் நவபாரதத்தைக் கட்டிகாக்க முற்பட்ட லால் பகதூர் சாஸ்திரி தாஷ்கண்ட் மண்ணில் 1966 ஜனவரி 11–ஆம் தேதி நள்ளிரவு ஒரு மணிக்கு மாரப்படைப்பால் மரணமடைந்தார்.

## மதிப்பீடு

இந்தியாவின் இரண்டாவது பிரதமரான லால் பகதூர் சாஸ்திரி உழைப்பால் உயர்ந்த உத்தமர். குலப் பின்னணியின் பக்க பலமின்றி நாட்டின் உயர்ந்த பதவிக்கு வந்தவர். காங்கிரஸ் சிண்டிகேட்டின் ஆதரவால் பிரதமரான சாஸ்திரி, பதவிப் பொறுப்பேற்றபின் 'எடுப்பார்க் கைப்பிள்ளையாக' இல்லாமல் சுதந்திரமாகச் செயல்பட்டார். ஆட்சித் தலைமை கட்சித் தலைமைக்கு அடங்கியிருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை எடுத்துக் காட்டினார். இந்தியா அதன் பிரச்னைகளைத் தன்னம்பிக்கையுடனும் தற்சார்புடனும் தீர்த்துக் கொள்ளக் கூடிய 'ஜனநாயக முயற்சியைப் பெற்றுள்ளதை உணர்த்தினார். கெய்ரோன், பட்நாயக், பக்ஷிகுலாம் முகமது, காமராஜர் போன்றோரது அதிகார எல்லைகளை அறியச் செய்தார். குற்றச் சாட்டுகளுக்கு உள்ளான நிதி அமைச்சர் டி.டி.கிருஷ்ணமாச்சாரியை அமைச்சரவையிலிருந்து விடுவிக்கத் தயங்கவில்லை. மொரார்ஜி தேசாயை அமைச்சரவையில் சேரவிடாமல் செய்து, இந்திரா காந்திக்கு இடம் கொடுத்து அவரை அரசியலில் நிலைத்து நிற்கச் செய்தார் லால் பகதூர் சாஸ்திரி, நேருவின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகளிலும், திட்டங்களிலும் தக்க மாற்றங்களைச் செய்ய முனைந்தார்.

லால் பகதூர் சாஸ்திரிக்கு இந்தியாவைப் பற்றிய தொலை நோக்கோ, வழிகாட்டு சித்தாந்தமோ, உறுதிப்பாடுகளோ இல்லை. சாஸ்திரி நேருவிட்டுச் சென்ற பணியை தன் சொந்த பணியில் செய்தார். சாஸ்திரியின் பங்களிப்பை ஓரளவு பொருளாதாரத் துறையில் காணமுடிந்தது. சாஸ்திரியின் இந்தி மொழிக் கொள்கை அவர் வரலாற்றிலிருந்து சரியான பாடத்தைக் கற்கவில்லை என்பதைக் காட்டியது. சாஸ்திரியின் ஆட்சிக்காலத்தில் இந்தியா சர்வதேச அரங்கில் விடுப்பு எடுத்துக் கொண்டதாகக் கருதுகிறார் ஆனந்த் மோகன். இருப்பினும் அயூப்கானின் முயற்சியை முறியடித்தன் மூலம் சாஸ்திரி சமகால வரலாற்றில் இடம் பெற்றார். பதினெட்டு மாதங்களே பிரதமராக இருந்த லால் பகதூர் சாஸ்திரி மகாத்மா காந்தியின் அகிம்சையையும், வல்லபாய் பட்டேலின் மன உறுதியையும், நேருவின் நிர்வாகத் திறனையும் வழித்துணையாகக் கொண்டு திறம்படச் செயலாற்றினார். சாஸ்திரியின் அணுகுமுறை யதார்த்தமானது, நடைமுறை சாத்தியமானது, இந்தியாவைக் குவிமையமாகக் கொண்டது. போரை முடிவுக்குக் கொண்டு வந்ததும், இந்தியா நியாயமான நம்பகமான நாடு என்ற சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்ததும் இவரது சாதனைகள் என்று குறிப்பிட்டுள்ளார் ஜே.என். தீக்ஷித்.

# 1.2 இந்திரா காந்தியின் ஆட்சி
## (ADMINISTRATION OF INDIRA GANDHI, 1966-71)

இந்திராகாந்தி இந்தியாவின் மூன்றாவது பிரதமராக 1966-ம் ஆண்டு பதவியேற்றார். சுமார் 16 ஆண்டுகள் பிரதமராக இருந்தார். இவர் இந்திய மக்களை நேசித்தார். இந்தியாவைப் பற்றி பெருமைப்பட்டார். அதன் எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கையுடன் இருந்தார். உலக நாடுகளுக்கு மத்தியில் இந்தியா சிறந்து விளங்க வேண்டும் என்று விரும்பினார். தன்னுடைய ஆட்சிக்காலத்தில் துணிச்சலான பல முடிவுகளை எடுத்தார். இந்தியா பொருளாதாரத்திலும், அறிவியல் தொழில்நுட்பத்திலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று விரும்பினார். இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் அந்நிய நாடுகள் தலையிடாதபடி பார்த்துக் கொண்டார். 1984, அக்.31-ல் தனது சீக்கிய மெய்க்காவலர்களால் சுடப்பட்டு மரணமடைந்தார். சமகால இந்திய வரலாற்றில் இந்திரா காந்தியின் சாதனைகளைக் காணலாம்.

### வாழ்க்கைக் குறிப்பு

1917, நவம்பர் 19ம் தேதி ஜவஹர்லால் நேரு, கமலா ஆகியோரின் ஒரே மகளாக அலகாபாத் ஆனந்தபவனில் இந்திராகாந்தி பிறந்தார். இந்திராவின் தாய் கமலா எலும்புருக்கி நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர் சிகிச்சைக்காக சுவிட்சர்லாந்து கொண்டு செல்லப்பட்டார். அவருடன் கூடவே சென்ற இந்திரா அங்கே கல்வி பயின்றார். கமலா 1936 பிப். 28-ல் இறந்த பிறகு சுவிட்சர்லாந்திலேயே இந்திரா கல்வியைத் தொடர்ந்தார். இந்தியா திரும்பிய இந்திரா சுதந்திரப் போராட்டத்தில் பங்கெடுத்த பெரோஸ் காந்தி என்பவரை 1942, மார்ச் 26ல் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு ராஜீவ் காந்தி, சஞ்சய் காந்தி ஆகிய இரண்டு மகன்கள் பிறந்தனர். இந்திரா காந்தியின் கணவர் பெரோஸ் காந்தி 1960-செப். திடீரென மாரடைப்பால் மரணமடைந்தார்.

இந்திராகாந்தி தனது இளமைப்பருவத்திலேயே காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளில் ஆர்வமுடன் கலந்து கொண்டார். 1955-ல் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினராகவும், 1957ல் மத்திய தேர்தல் கமிட்டி உறுப்பினராகவும்

தேர்ந்தெடுக்கப்பட்டார். 1959-ல் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960-ல் கணவர் பெரோஸ் காந்தியின் மரணத்திற்குப் பிறகு அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். தனது தந்தை நேருவுடன் பல வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொண்டார். அதன் மூலம் உலகத் தலைவர்களைப் பற்றி தெரிந்து கொண்டார். மேலும் இவர் நேருவுடன் தீன் மூர்த்தி பவனிலேயே தங்கிவிட்டதால் பல உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் தலைவர்களின் அறிமுகம் கிடைத்தது. இவ்வாறு தனது தந்தை நேரு காலத்திலேயே சிறந்த அரசியல் அனுபவத்தைப் பெற்றுக் கொண்டார். சாஸ்திரி காலத்தில் செய்தி ஒலிபரப்பு அமைச்சராக பதவி வகித்தார். சாஸ்திரியின் மரணத்திற்குப் பிறகு பிரதமராக தேர்வு செய்யப்பட்டார்.

## இந்திராகாந்தி பிரதமராக தேர்வு செய்யப்படுதல் :

லால்பகதூர் சாஸ்திரி இறந்த பிறகு அடுத்த பிரதமர் யார் என்ற கேள்வி எழுந்தது. இந்தியா இரண்டாவது முறையாக பிரதமரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். மொரார்ஜி தேசாய் தான் பிரதமர் பதவிக்கு போட்டியிடப் போவதாக அறிவித்தார். காமராஜ் மற்றும் சிண்டிகேட் தலைவர்கள் இந்திரா காந்தியை பிரதமராகத் தேர்ந்தெடுக்க விரும்பினார்கள். போட்டியைத் தவிர்ப்பதற்காக மொரார்ஜி தேசாயை காமராஜ் சந்தித்து பேசினார். பலன் இல்லை. போட்டி உறுதியானது.

பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்காக 1966 ஜனவரி 19-ம் தேதி பாராளுமன்ற எம்.பிக்கள் கூட்டம் பாராளுமன்ற மத்திய மண்டபத்தில் நடந்தது. ஜி.எஸ். பக்தேர்தல் அதிகாரியாகப் பணியாற்றினார். வாக்கெடுப்பு ரகசிய முறையில் நடந்தது. 524 எம்.பிக்களில் 355 ஒட்டுகள் பெற்று இந்திராகாந்தி பிரதமராகத் தேர்ந்தெடுக்ககப்பட்டார். மாநிலம், மதம், சாதி ஆகியவற்றுடன் சம்பந்தம் இல்லாத இந்திராகாந்தி தன் மீது உள்ள பொறுப்புகளை உணர்ந்து எல்லோருடைய ஆதரவுடனும், நடுநிலையுடனும் செயல்படுவேன் என்றார்.

1966, ஜனவரி 24-ம் தேதி இந்திராகாந்தி மந்திரிசபை பதவி ஏற்றது. குடியரசுத்தலைவர் ராதாகிருஷ்ணன் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். இந்திரா மந்திரி சபையில் உள்துறை மந்திரியாக நந்தா, சுவரண்சிங் வெளிஉறவு, சவான் ராணுவத்துறை, சி. சுப்ரமணியம் உணவுத்துறை, திட்ட மந்திரியாக அசோக் மேத்தா, போக்குவரத்து மந்திரியாக சஞ்சீவி ரெட்டி மற்றும் 18 இணை அமைச்சர்களும், 17 உதவி அமைச்சர்களும் இடம் பெற்றனர். 49 வயதேயான, அரசியலில் முதிர்ந்த அனுபவம் இல்லாத இந்திராகாந்தியின் ஆட்சி ஆரம்பமானது.

## இந்திராகாந்தி தான் எதிர்நோக்கிய பிரச்சனைகளை தீர்த்தல்

பிரதமராக பதவியேற்ற இந்திரா பல பிரச்சனைகளை உடனடியாக தீர்க்க வேண்டியதிருந்தது. முக்கியமாக பஞ்சாபி சுபா, மற்றும் நாகா - மிசோ

மக்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு காண வேண்டியதிருந்தது. அவர் பஞ்சாபி சுபா கோரிக்கையை ஏற்றுக் கொண்டார். நாகா மற்றும் மிசோ கலகக் காரர்களை ஒடுக்க உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

### a) மிசோ பிரிவினைவாத இயக்கத்தை நசுக்குதல் : 1966 மார்ச்,

பதவி ஏற்ற இரண்டு மாதங்களில் இந்திரா மிசோ எழுச்சியைச் சந்திக்க வேண்டியதிருந்தது. மிசோ பிரிவினைவாத இயக்கமான மிசோ தேசிய முன்னணி கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ராணுவத்தளவாடங்களையும் ராணுவப் பயிற்சியையும் பெற்று கலகத்தில் ஈடுபட்டது. மிசோரத்தை சுதந்திர நாடாக பிரகடனம் செய்தது. இந்திரா காந்தி உடனடியாக ராணுவ உதவியுடன் கலகத்தை ஒடுக்க உத்தரவிட்டார். மிசோ பிரிவனைவாதிகள் விரட்டப் பட்டனர். அவர்கள் கிழக்கு பாகிஸ்தானில் தஞ்சமடைந்தார்கள். இந்திரா மேற்கொண்ட உடனடி நடவடிக்கை மூலம் மிசோ பிரிவினைவாதம் முழுவதுமாக நசுக்கப்பட்டது.

### b) பொருளாதார நெருக்கடியைச் சமாளித்தல்

வடகிழக்குப் பகுதியில் நிலவிய அமைதியற்ற சூழலுடன் நாடு கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்தது. இரண்டு ஆண்டுகளாக மழை இல்லை. பொருளாதார நிலை வேகமாக சீர்குலைந்து கொண்டிருந்தது. பல மாநிலங்களில் உணவு பற்றாக்குறை ஏற்பட்டது. பீகார் மற்றும் உத்திரப் பிரதேச மாநிலத்தின் கிழக்குப் பகுதியில் பஞ்சம் நிலவியது. கேரளாவில் நடந்த உணவுக் கலகங்கள் நாட்டின் பொருளாதார நிலையைக் காட்டியது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் நெருக்கடியில் சிக்கியிருந்தது.

இச்சூழ்நிலையில் இந்திரா காந்தி அமெரிக்காவின் உதவியைச் கோரத் தயங்க வில்லை. 1966 மார்ச் 28-ல் அமெரிக்க பயணத்தை மேற்கொண்டார். குடியரசுத் தலைவர் லிண்டன் ஜான்சனிடம் அவசர உணவு உதவி பற்றியும், அமெரிக்காவின் பொருளாதார உதவியை புதுப்பிக்க வேண்டியதின் அவசியம் பற்றியும் விவாதித்தார். உடனே ஜான்சன் P.L.480 திட்டத்தின் கீழ் 3.50 மில்லியன் டன் உணவுத் தானியங்களையும், உதவியாக 900 மில்லியன் டாலர்களையும் கொடுக்க ஒத்துக் கொண்டார். ஆனால் உதவி மொத்தமாகக் கிடைக்கவில்லை. சிறிய அளவிலேயே வந்தது. இது போன்ற நடவடிக்கை களை மேற்கொண்டு பொருளாதார நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார் இந்திரா.

### c) ரூபாயின் மதிப்பு குறைக்கப்படுதல் : 1966, ஜூன் 6

1965-ம் வருட இந்திய பாகிஸ்தான் போர் நடைபெற்ற போது உலக வங்கி மற்றும் சர்வதேச நிதி ஆணையமும் (IMF)இந்தியாவுக்கு உதவியை நிறுத்தி விட்டன. மேலும் அமெரிக்க குடியரசுத் தலைவர் ஜான்சன் ரூபாய் மதிப்பைக்

குறைத்தால் உணவு உதவி செய்வதாகக் கூறினார். அத்துடன் மேலே சொல்லப் பட்ட இரண்டு நிறுவனங்களும் ரூபாயின் மதிப்பைக் குறைக்க வேண்டும் என்று கோரின. ரூபாய் மதிப்பைக் குறைத்தால் அந்நிய மூலதனம் இந்தியாவுக்கு ஓடிவரும் என்று இந்திராவின் ஆலோசகர்கள் தெரிவித்தார்கள்.

எனவே இந்திராவின் தலைமையில் 1966 ஜூன் 5-ல் நடைபெற்ற மந்திரி சபைக் கூட்டத்தில் ரூபாய் மதிப்பைக் குறைக்க முடிவு செய்யப்பட்டது, இதற்கு காமராஜர் கடும் எதிர்ப்பு தெரிவித்தார். மறுநாள் ஜூன் 6 முதல் ரூபாய் மதிப்பு குறைப்பு அமலுக்கு வந்தது. 1949-ல் முதல் முறையாக ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டது. 1966ல் 2வது முறையாகக் குறைக்கப்பட்டது.

இதன்படி ரூபாயின் மதிப்பு 35.5 சதவீதம் குறைக்கப்பட்டது. சர்வதேச சந்தையில் 100 ரூபாய்க்கு 18 கிராம் தங்கம் என்பது தற்போது 100 ரூபாய் 11 கிராம் தங்கம் என்று மதிப்பிடப்படும். அமெரிக்க பொருட்களுக்கு டாலர் ஒன்று 4 ¾ரூபாய் கொடுக்கப்பட்டது. இனி 7½ ரூபாய் கொடுக்க வேண்டும். இங்கிலாந்து பொருட்களுக்கு பவுண்டுக்கு 13 ரூபாய் என்பது இனி 21 ரூபாய் கொடுக்கப்பட வேண்டும். ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதால் வெளிநாட்டுப் பொருட்களுக்கு அரைமடங்கு ரூபாய் அதிகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ரூபாய் மதிப்பு குறைக்கப்பட்டதால் பவுனுக்கு 118 ரூபாய்க்கு இருந்த தங்கம் ஒரே நாளில் பவுனுக்கு 130 ரூபாயாக உயர்ந்தது!

ரூபாய் மதிப்பு குறைப்பை எல்லா அரசியல் கட்சிகளும் எதிர்த்தன. மத்திய மந்திரி வெங்கட்ராமன் எதிர்ப்பு தெரிவித்தார். காமராஜர் கடும் வருத்தமடைந்தார். இந்தியா அமெரிக்காவுக்கு பணிந்து விட்டது என்று இடது சாரிக் கட்சிகள் குற்றம் சாட்டின. 1967-ல் தேர்தல் வரப்போகிற நேரத்தில் இப்படிப்பட்ட முடிவு தேவையில்லையென்று காங்கிரஸ்காரர்கள் கூறினார்கள்.

ரூபாய் மதிப்பைக் குறைத்தால் ஏற்றுமதி அதிகரிக்கும், அந்நிய மூலதனம் இந்தியாவுக்கு ஓடிவரும் என்றார்கள். ஆனால் எதுவும் நடக்க வில்லை. அது தவறான முடிவு, அதிகமான தீங்கு ஏற்பட்டது என்று 1980-ல் இந்திரா காந்தியே கூறினார்.

### d) அரசுக்கு எதிரான போராட்டங்கள் :

இந்திராகாந்தியின் காலத்தில் 1966-ல் நாட்டில் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றினால் போராட்டங்கள் நடைபெற்றன. அரசாங்கம் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையைக் கடைப் பிடித்ததால், சமூகத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தன. இந்த கால கட்டத்தில் தான் தடைகளை அமைத்து, பேருந்துகளை நிறுத்தி மக்கள் வாழ்க்கையை ஸ்தம்பிக்கச் செய்த பந்த் என்ற கடையடைப்பு போராட்டம் நடந்தன. ஆசிரியர்கள், மருத்துவர்கள் மற்றும் பொறியாளர்கள்

போராட்டங்களில் ஈடுபட்டார்கள். அரசாங்கம் மற்றும் அரசியல் தலைமை மீது பொதுமக்களுக்கு நம்பிக்கை குறைந்தது. எதிர்க்கட்சிகள் பந்த்களை நடத்தி அரசாங்கத்திற்கு இடையூறு செய்தன. தேர்தல் அல்லது வன்முறை மூலம் ஆட்சியைப் பிடித்துவிட முடியும் என்று நம்பின.

### e) டெல்லியில் பசுவதை தடைகோரிபோராட்டம் : 1966 நவ. 7

ஜனசங்கம் மற்றும் சில வகுப்புவாதக் கட்சிகள் பசுவதையை முழுவது மாகத் தடைசெய்ய வேண்டும் என்பதற்காக 1966, நவம்பர் 7-ல் டெல்லி பாராளுமன்றம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்தன. சில எதிர்க்கட்சி களும் இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தன. ஆர்ப் பாட்டத்தில் கலந்துகொள்வதற்காக 7 லட்சம் பேர் டெல்லி ராம் லீலா மைதானத்தில் கூடி பாராளுமன்றக் கட்டிடத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். இதில் பல்லாயிரக்கணக்கான சன்னியாசிகள் கைகளில் வாள், ஈட்டி, திரிசூலம் ஏந்திச் சென்றார்கள்.

பாராளுமன்ற கட்டிடத்தை அடைந்த போது சில சன்னியாசிகள் பாராளுமன்றக் கட்டிடத்திற்குள் நுழைய முற்பட்டார்கள். இதனால் போலீஸ் காரர்களுக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. பின்னர் கலவரமாக மாறி, ஆர்ப்பாட்டக்காரர்கள் கல்வீச்சில் இறங்கினார்கள். இதன் தொடர்ச்சியாக நடைபெற்ற பெரும் கலவரத்தைக் கட்டுப்படுத்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. அதில் 7 பேர் பலியானார்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து ஓடும் போது அரசுக் கட்டிடங்களுக்குத் தீ வைத்தார்கள். காமராஜர் வீட்டுக்குள் நுழைந்து தீ வைத்தார்கள். ராணுவம் வர வழைக்கப்பட்டு வன்முறை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்திரா காந்தி கலவரப்பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டார். அப்போது அரசுக்கெதிரான கலவரங்களை ஒடுக்க அரசாங்கம் பலாத்காரத்தைப் பயன்படுத்த தயங்காது என்றார். இந்தக் கலவரங்களால் நமது பண்பாடு, வாழ்க்கை முறை, நமது மதிப்பு பாதிக்கப்படுகிறது என்றார்.

## வெளி உறவுக்கொள்கை

இந்திராகாந்தி வெளிநாட்டு விவகாரங்களில் சுதந்திரமான உறுதியான கொள்கைகளைக் கடைப்பிடித்தார்.

1966 ஜூலையில் அமெரிக்கா வடக்கு வியட்நாமையும் அதன் தலைநகரமான ஹனோயையும் குண்டு வீசித் தாக்கியதை இந்திரா கண்டித்தார். வியட்நாமில் அமெரிக்கா ஆக்கிரமிப்பு செய்கிறது. குண்டு வீசுவதை அமெரிக்கா உடனடியாக நிறுத்த வேண்டும் என்று சோவியத் யூனியனுடன் சேர்ந்து கூட்டறிக்கை வெளியிட்டார்.

இந்திரா காந்தி எகிப்து அதிபர் நாசர், யூகோஸ்லோவிய அதிபர் டிட்டோ ஆகியோருடன் நெருக்கமான உறவுகளை வளர்த்துக் கொண்டார். அமெரிக்க

மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் புதிய காலனியாதிக்கக் கொள்கைகளைப் பின்பற்றுவதால் அணிசேரா நாடுகள் ஒத்துழைக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தினார். சீனாவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் இந்திய சீன உறவுகளில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

## 1967-ம் வருடப் பொதுத்தேர்தல்

நேருவின் காலத்திலிருந்தே காங்கிரஸ் கட்சியில் கோஷ்டி சண்டைகள் ஆரம்பமாகிவிட்டன. எல்லா மாநிலங்களிலும் அதிருப்தியாளர்கள் மாநில முதலமைச்சர்களை மிரட்டினார்கள். இந்தியாவில் சமூக மாற்றங்களின் கருவியாக விளங்கிய காங்கிரஸ் தனது உத்வேகத்தை இழந்து கொண்டிருந்தது. காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் பதவிப் பித்தர்களாக ஊழலில் சிக்கியவர் களாக இருந்தார்கள். அதே சமயத்தில் காங்கிரசின் இடத்தைப் பிடிப்பதற்கு எந்தக் கட்சிக்கும் தகுதி இல்லை. மக்களிடம் அரசியல் விழிப்புணர்ச்சி அதிகரித்திருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தான் நான்காவது பொதுத் தேர்தல் நடைபெற்றது.

காங்கிரசின் தேர்தல் இயக்கதிற்கு சிண்டிகேட் தலைமை தாங்கியது. பொதுமக்களிடம் கட்சிக்கு ஆதரவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வில்லை. கட்சியில் இந்திரா தனிமைப்பட்டிருந்தார். இந்த தேர்தலில் காங்கிரஸ் பலமான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியதிருந்தது. எதிரிக் கட்சிகள் கூட்டணி அமைத்துக் கொண்டன. அல்லது குறிப்பிட்ட தொகுதியில் மட்டும் உடன்பாடு வைத்துக் கொண்டன.

இந்திராகாந்தி நாடு முழுவதும் சென்று பிரச்சாரத்தில் ஈடுபட்டார். ஒரிசா தலைநகர் புவனேஸ்வரத்தில் இந்திரா பேசிய போது அவர் மீது கல்வீச்சு நடந்தது. முகத்தில் ரத்தக்காயங்கள் ஏற்பட்டன. மூக்கில் எலும்பு உடைந்தது.

1967-ம் வருட தேர்தலில் காங்கிரசுக்கு பெரும் சரிவு ஏற்பட்டது. தமிழ் நாடு உட்பட 6 மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வியடைந்தது. தமிழ்நாட்டில் ஆட்சியை திமுக கழகம் கைப்பற்றியது. விருதுநகர் சட்ட சபைத் தொகுதியில் போட்டியிட்ட அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காமராஜர் திமுக வேட்பாளர் பெ. சீனிவாசனிடம் தோல்வியடைந்தது அகில இந்தியாவை யும் திடுக்கிடச் செய்தது.

ஆனாலும் பாராளுமன்றத்துக்கு காங்கிரசுக்கு மெஜாரிட்டி கிடைத்தது. மொத்தம் உள்ள 520 இடங்களில் காங்கிரசுக்கு 281 இடங்கள் கிடைத்தது. ரேபரேலி தொகுதியில் போட்டியிட்ட இந்திராகாந்தி வெற்றி பெற்றார்.

## இந்திரா மீண்டும் பிரதமரானார் : 1967, மார்ச் 12

ஆறு மாநிலங்களில் காங்கிரஸ் தோல்வியடைந்ததால் இந்திரா காந்தியின் பலம் குறைந்துள்ளதை மொரார்ஜி தேசாய் கண்டு கொண்டார். எனவே இந்

முறையும் பிரதமர் பதவிக்குப் போட்டியிட்டு இந்திரா காந்தியைத் தோற்கடித்து பிரதமராகி விடவேண்டும் என்று விரும்பினார். ஆனால் காமராஜரும் சிண்டிகேட் தலைவர்களும் போட்டியை விரும்பவில்லை. எனவே தேசாயிடம் பேச்சுவார்த்தை நடத்தி துணைப்பிரதமர் பதவி கொடுப்பதாகக் கூறி போட்டியைத் தவிர்த்தனர்.

1967மார்ச் 12-ல் இந்தியாவின் பிரதமராக மீண்டும் இந்திரா காந்தி ஒரு மனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மொரார்ஜி தேசாய் துணைப் பிரதமர் ஆனார். அவருக்கு நிதி இலாகா கொடுக்கப்பட்டது. ஆனால் மந்திரி சபை அமைப்பதில் காமராஜரையோ, சிண்டிகேட் தலைவர்களையோ இந்திரா காந்தி கலந்து ஆலோசிக்கவில்லை. தனது ஆதரவாளர்களையே பெருமளவு மந்திரிகளாக நியமித்ததுடன் முக்கிய இலாக்காக்களையும் வழங்கினார். இதன் மூலம் கட்சியிலும், ஆட்சியிலும் தனது மேலாதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார் இந்திரா.

## குடியரசுத் தலைவர் தேர்தலில் இந்திரா ஆதரவு ஜாகீர் உசேன் வெற்றி : 1967

1967-ம் வருட இறுதியில் குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் முடிவதாக இருந்தது. எனவே குடியரசுத்தலைவர் தேர்தல் நடந்தது. இதில் துணைக் குடியரசுத்தலைவர் ஜாகீர் உசேனை காங்கிரஸ் கட்சியின் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்றார் இந்திரா. ஆனால் காமராஜரும் சிண்டிகேட் தலைவர்களும் ராதாகிருஷ்ணனையே மீண்டும் வேட்பாளராக நிறுத்த விரும்பினர். ஆனால் இந்திராவின் பிடிவாதத்தால் ஜாகீர் உசேன் குடியரசுத் தலைவராகவும், வி.வி. கிரி துணைக் குடியரசுத்தலைவராகவும் வேட்பாளராக அறிவிக்கப்பட்டனர்.

காங்கிரஸ் கட்சிக்கு பாராளுமன்றத்திலும், மாநில சட்டமன்றங்களிலும் குறைந்த அளவே பெரும்பான்மை இருந்த காரணத்தினால் ஊக்கமடைந்த எதிர்க்கட்சிகள் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கே.சுப்பாராவை வேட்பாளராக நிறுத்தினர்.

தேர்தல் 1967-மேயில் நடைபெற்றது. தேர்தலில் ஜாகீர் உசேன் ஏழு சதவீத அதிக ஓட்டுகள் பெற்று வெற்றி பெற்றார். இந்த வெற்றியினால் கட்சியிலும் ஆட்சியிலும் இந்திராவின் செல்வாக்கு உயர்ந்தது. சிண்டிகேட் தலைவர்களின் பிடிதளர்ந்தது. இந்தியாவின் முதல் முஸ்லீம் குடியரசுத் தலைவரானார் ஜாகீர் உசேன். இந்தியாவின் சமயசார்பற்ற கொள்கைக்கும் இது வெற்றியாக அமைந்தது.

## இந்திராகாந்தியின் சில நிர்வாக நடவடிக்கைகள்

a) இந்திரா காந்தி கல்வி முறையில் சில சீர்திருத்தங்களைப் புகுத்த முற்பட்டார். 1966-ம் வருட கல்விக் கமிஷன் அறிக்கையில் காணப்பட்ட சில

திட்டங்களை செயல்படுத்த முயற்சித்தார். முக்கியமாக அந்த அறிக்கையின் படி, இந்தி, ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழிகளைப் படிக்க வேண்டும். இது மும்மொழித் திட்டமாகும். ஆனால் நாடாளுமன்றக் கல்விக்குழு இந்தி அல்லது ஆங்கிலம் மற்றும் பிராந்திய மொழி என்ற இருமொழித் திட்டத்தை பரிந்துரை செய்தது. இந்த இருமொழித் திட்டத்தை மொரார்ஜி தேசாய் கடுமையாக எதிர்த்தார். எனவே சில மாநிலங்களில் மும்மொழித் திட்டமும், சில மாநிலங்களில் இருமொழித் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

b) சாஸ்திரியின் ஆட்சிக்காலத்தில் ஆட்சிமொழிப் பிரச்சனையால் பல மாநிலங்களில் இந்தி எதிர்ப்பு போராட்டம் நடந்தது. இந்தி, ஆங்கிலம் ஆட்சி மொழியாகத் தொடரும் என்று ஆணை வெளியிடப்பட்டது. இந்திரா காந்தியின் ஆட்சிக் காலத்தில் 1967 - டிசம்பரில் ஆட்சி மொழிகள் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி இந்தி பேசாத மக்களுக்கு நேரு அளித்த வாக்குறுதிக்கு சட்ட அங்கீகாரம் கொடுக்கப்பட்டது. மத்தியில் இந்தி மற்றும் ஆங்கிலம் என்ற இருமொழி ஆட்சி உறுதி செய்யப்பட்டது. இந்தச் சட்டத்தின் மூலம் மொழிப்பிரச்சனையைத் தீர்த்து வைத்தார் இந்திரா காந்தி.

c) இந்திராகாந்தியின் ஆட்சி காலத்தில் மத்திய மாநில உறவுநிலையில் விரிசல் ஏற்பட்டது. காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகள் மாநில உரிமைகளில் மத்திய அரசு அதிகமாகத் தலையிடுவதாக எதிர்ப்பு தெரிவித்தன. மேலும் மாநிலங்கள் பல பிரச்சனைகளில் மத்திய அரசுடன் ஒத்துழைக்கவில்லை. மத்திய பாதுகாப்பு படைகளை மாநில அரசு சம்மதம் இல்லாமல் மாநிலங்களுக்கு அனுப்பப்படுவதை எதிர்த்தன. இதனால் மத்திய மாநில உறவில் விரிசல் அதிகரித்தது. இந்திரா காந்தி உத்திரபிரதேசம், ராஜஸ்தான் மாநில அரசுகளை அரசியலமைப்பின் 352-வது பிரிவைப் பயன்படுத்தி கலைத்தார். தமிழ்நாட்டில் இருந்த திமுக அரசு மத்திய மாநில உறவு பற்றி ஆய்வு செய்ய பி.வி. ராஜமன்னார் கமிட்டியை அமைத்தது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்ற கோரிக்கை வலுவடைந்தது.

## இந்திரா காந்திக்கும் கட்சி மேலிடத் தலைவர்களுக்குமிடையே உட்கட்சி பூசல்

இந்திராகாந்திக்கும் காங்கிரஸ் மேலிடத் தலைவர்களுக்குமிடையே கருத்து வேற்றுமை வளர்ந்து வந்தது. தனது முற்போக்குத் திட்டங்களுக்கு தலைவர்கள் தடையாக இருப்பதாக இந்திரா கருதினார். இந்திரா காந்தி கட்சி மேலிடம் சொல்கிறபடி நடந்து கொள்வார் என்று மூத்தத் தலைவர்கள் எதிர்பார்த்தனர். ஆனால் அவரோ தலைவர்களை கலந்து ஆலோசிக்காமல் தானே முக்கிய முடிவுகளை எடுத்தார். இதன் காரணமாக இருதரப்பினருக்கும் இடையே பூசல் வளர்ந்தது. இந்திராகாந்தி மீண்டும் காமராஜர் காங்கிரஸ் தலைவராவதை விரும்பவில்லை. சிண்டிக்கேட்டைச் சார்ந்த மைசூர்

முதலமைச்சர் நிஜலிங்கப்பா 1967-டிசம்பர் 7ல் காங்கிரஸ் தலைவரானார். இந்திரா காந்தியை ஆதரித்த சில தலைவர்கள் புதிய செயற்குழுவில் சேர்க்கப் படவில்லை. இந்திரா காந்தியை கவிழ்த்துவிட்டு மொரார்ஜியை பிரதமராக்க அவர்கள் சதி செய்தார்கள்.

இந்திரா காந்தி சிண்டிகேட்டுடன் மோத விரும்பவில்லை. லோக் சபாவில் காங்கிரஸ் கட்சிக்கு குறைவான பெரும்பான்மை தான் இருந்தது. எனவே சிண்டிகேட் தலைவர்களுடனும், தேசாயுடனும் முடிந்தவரை ஒத்துப் போக விரும்பினார் இந்திரா. ஆனால் பிரதமருடைய தலைமை அதிகாரத்தைக் குறைப்பதற்கு அவர் விரும்பவில்லை. மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட அரசாங்கம் பாராளுமன்றத்துக்கு மட்டுமே கட்டுப்படும் என்றார் இந்திரா

## இந்திரா காந்தி மீது ஒழுங்கு நடவடிக்கை

1969, மே மாதம் 3-ம் தேதி குடியரசுத்தலைவர் ஜாகீர் உசேன் மரண மடைந்தார். துணை குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி தற்காலிக குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்றார். புதிய குடியரசுத்தலைவராக யாரைத் தேர்ந்தெடுப்பது என்பதில் இந்திராவுக்கும் சிண்டிகேட் தலைவர் களுக்குமிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டது. வி.வி. கிரியை இந்திராவும், சஞ்சீவ ரெட்டியை சிண்டிகேட் தலைவர்களும் தேர்ந்தெடுக்க விரும்பினார்கள். சிண்டிகேட் தலைவர்களின் ஆதரவுடன் சஞ்சீவ ரெட்டி பதவிக்கு வந்தால் தனது பதவிக்கு ஆபத்து ஏற்படும் என்று இந்திரா கருதினார். இந்திராவின் எதிர்ப்பை மீறி சஞ்சீவரெட்டி வேட்பு மனுதாக்கல் செய்ததால் இந்திராவின் ஆதரவுடன் வி.வி.கிரியும் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

குடியரசுத்தலைவர் தேர்தலில் மனச்சாட்சிப்படி, அவரவர் விருப்பப்படி வாக்களிக்க அனுமதிக்கும்படி கட்சித்தலைவர் நிஜலிங்கப்பாவுக்கு கோரிக்கை வைத்தார். இதனைத் தொடர்ந்து இந்திரா காந்தி மீது நடவடிக்கை எடுக்ககட்சி மேலிடம் தீர்மானித்தது. உங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று காரணம் கூறுமாறு இந்திராகாந்திக்கு நிஜலிங்கப்பா நோட்டீஸ் அனுப்பினார்.

## இந்திரா காந்தியின் எதிர் நடவடிக்கைகள்

சிண்டிகேட் தலைவர்கள் தன்னை பதவியிலிருந்து வெளியேற்ற விரும்புகிறார்கள் என்பதை இந்திரா புரிந்து கொண்டார். சிண்டிகேட்டை எதிர்க்க முடிவு செய்தார்.

ஏற்கனவே 1967-ல் காங்கிரஸ் பொதுத் தேர்தலில் தோல்வியடைந்த பிறகு மே மாதம் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழு மக்களின் ஆதரவைத் திரட்ட 10 அம்சத்திட்டத்தை நிறைவேற்றியிருந்தது. வங்கிகள் மீது சமூக நிர்வாகம்,

பொது காப்பீட்டுத் தொழிலை நாட்டுடமையாக்குதல், இறக்குமதி, ஏற்றுமதியில் அரசு வர்த்தகம், நகர சொத்து மற்றும் வருமானத்துக்கு உச்ச வரம்பு விதித்தல், ஏகபோக நிறுவனங்களைக் கட்டுப்படுத்துதல், நியாய விலைக் கடைகளில் உணவு தானிய விநியோகம், நிலச்சீர்திருத்தம், கிராமப் புற ஏழை மக்களுக்கு வீட்டுமனை, அரசர்களின் மானியங்களை ஒழித்தல் ஆகியவை 10 அம்ச திட்டத்தில் இருந்தன. இதன் அடிப்படையில் முற்போக்கான திட்டங்களையும் கொள்கைகளையும் அறிவித்தார் இந்திரா.

### a) மொரார்ஜி பதவி பறிப்பு

இருதரப்பினரும் குடியரசுத்தலைவர் தேர்தலில் ஆதரவு திரட்டுவதில் முனைந்திருந்த போது ஜூலை 16-ம் தேதி யாரும் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று நடந்தது. மொரார்ஜி தேசாயிடமிருந்து நிதி இலாகா பொறுப்பை இந்திராகாந்தி எடுத்துக் கொண்டார். ஆனால் துணைப் பிரதமரமாக நீடிக்கலாம் என்று தேசாய்க்கு கடிதம் எழுதினார். இதைத் தொடர்ந்து துணைப் பிரதமர் பதவியை தேசாய் ராஜினாமா செய்தார். மொரார்ஜிதேசாயை மந்திரி பதவியிலிருந்து நீக்காமல் நிதி இலாகாவை மட்டும் பறித்துக் கொண்டு, அதன் காரணமாக அவராக விலகிப் போகும்படி செய்ததின் மூலம் இந்திராகாந்தி தன் ராஜதந்திரத்தை நிரூபித்துக் காட்டினார்.

### b) வங்கிகள் அரசுடமை ஆக்கப்படுதல் : 1969 ஜூலை 21

இந்திரா காந்தி 1967 அக்டோபர் 25-ல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே வங்கிகளைத் தேசியமயமாக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார். ஆனால் மொரார்ஜி தேசாயின் கடும் எதிர்ப்புக் காரணமாக தனது திட்டத்தை வற்புறுத்தவில்லை. இப்போது மொரார்ஜியிடமிருந்து நிதி இலாகாவை பறித்துக் கொண்ட 2 நாட்களுக்குப் பிறகு ஐம்பது கோடிக்கு மேல் வைப்புத் தொகை உள்ள 14 வங்கிகளை அரசுடமையாக்குவதற்கான அவசர சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இதனைப் பிறப்பித்தவர் அப்போது தற்காலிக குடியரசுத் தலைவராக இருந்த வி.வி.கிரி ஆவார். அரசுடமை ஆக்கப்பட்ட வங்கிகள் வருமாறு:

1. சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா
2. பாங்க் ஆப் இந்தியா
3. பஞ்சாப் நேஷனல் பாங்க்
4. பாங்க் ஆப் பரோடா
5. யுனைட்டட் கமர்சியல் பாங்க்
6. கனரா பாங்க்
7. யுனைட்டட் பாங்க் ஆப் இந்தியா
8. தேனா பாங்க்
9. சிண்டிகேட் பாங்க்க

10. யூனியன் பாங்க் ஆப் இந்தியா
11. அலகாபாத் பாங்க்
12. இந்தியன் பாங்க்
13. பாங்க் ஆப் மகராஷ்டிரா
14. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க்

அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளின் ஊழியர்கள் தொடர்ந்து நீடிப்பார்கள். வங்கிகளின் பங்குதாரர்களுக்கு நஷ்ட ஈடுவழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

வங்கிகளால் பணக்காரர்கள் தான் நன்மையடைகிறார்கள். பல ஏழைகள் வங்கிகளுக்குள் போனதே இல்லை. ஏழை எளிய மக்களுக்கு உதவுவதற்காகவே வங்கிகளை அரசுடமையாக்கியுள்ளோம். சிறுதொழிலாளிகளும், பெண்களும் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்களும் இனி எளிதில் வங்கிகளை அணுகி கடன் வசதி பெற முடியும். இதன் மூலம் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் முன்னேற வழி ஏற்படும் என்றார் இந்திரா.

வங்கிகளை அரசுடமையாக மாற்றியதற்கு நாடு முழுவதும் பெரும் வரவேற்பு கிடைத்தது. டெல்லியில் ஆட்டோ டிரைவர்கள், சிறுதொழில் செய்பவர்கள் பெரும் பேரணி நடத்தி இந்திராவுக்கு ஆதரவு தெரிவித்தனர்.

### c) மன்னர் மானியம் ஒழிப்பு

1967-ஜூன் மாதம் கூடிய அகில இந்தியக் காங்கிரஸ் கூட்டத்தில் அரசாங்கம் மன்னர்களுக்கு கொடுத்து வந்த மானியத்தையும், பிற சிறப்புச் சலுகைகளையும் உடனடியாக நிறுத்தவேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இந்தப் பிரச்சனையை மன்னர்களுடன் பேசி முடிவு செய்ய விரும்பினார் இந்திரா. ஆனால் அரசியலமைப்பு 29, 291, 366-ம் விதிகளின்படி சட்டப்பாதுகாப்பு இருந்ததால் மன்னர்கள் தங்கள் உரிமையை விட்டுக்கொடுக்க மறுத்துவிட்டனர்.

எனவே 1970 ஆகஸ்ட் மாதம் மன்னர் மானிய ஒழிப்பு மசோதா கொண்டு வரப்பட்டது. 24வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் மூலம் மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது.

## குடியரசுத் தலைவர் தேர்தலில் வி.வி. கிரி வெற்றி

1969-ம் வருட குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் நிறுத்தப்பட்ட சஞ்சீவரெட்டி, கம்யூனிஸ்ட், முஸ்லீம்லீக், திமுக, அகாலிதளம் ஆகிய கட்சிகளின் ஆதரவுடன் வி.வி.கிரி சுயேச்சையாகப் போட்டியிட்டார். காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா, சுதந்திராக்கட்சி, ஜனசங்கம் தலைவர்களைச் சந்தித்து, சஞ்சீவ ரெட்டிக்கு ஆதரவு கேட்டார். என்னை ஆட்சியிலிருந்து வெளியேற்றுவதற்கு வகுப்புவாத மற்றும் பிற்போக்கு

சாதிகளுடன் ஒப்பந்தம் செய்கிறார்கள் என்று இந்திரா குற்றம் சாட்டினார். காங்கிரஸ் எம்.பிக்கள் மனச்சாட்சிப்படி வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் இந்திரா. காங்கிரஸ் எம்.பிக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வி.வி. கிரிக்கு ஆதரவாக வாக்களித்தனர். வி.வி. கிரிக்கு 4,20,077 ஓட்டுகளும், சஞ்சீவரெட்டிக்கு 4,05,427 ஓட்டுகளும் கிடைத்தன. மிகக் குறைவான பெரும்பான்மையில் கிரி வெற்றி பெற்றார்.

## காங்கிரஸ் இரண்டாக உடைந்தது : 1969

குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரசின் அதிகாரப்பூர்வ வேட்பாளரைத் தோற்கடித்ததால் இந்திரா காந்தி மீது நடவடிக்கை காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்தது. 1969 நவம்பர் 12-ல் இந்திரா காந்தி காங்கிரஸ் கட்சியை விட்டு நீக்கப்பட்டார். இதைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி இரண்டாக உடைந்தது. லோக்சபா காங்கிரஸ் கட்சியில் 220 உறுப்பினர்கள் இந்திராவை ஆதரித்தார்கள். 68 உறுப்பினர்கள் சிண்டிகேட்டை ஆதரித்தார்கள். அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் மொத்த உறுப்பினர்கள் 705 பேரில் 446 உறுப்பினர்கள் இந்திராவை ஆதரித்தனர்.

இந்திராவின் தலைமையிலான காங்கிரஸ் இந்திரா காங்கிரஸ் என்றும் சிண்டிகேட்டை ஆதரித்தவர்கள் ஸ்தாபன காங்கிரஸ் என்றும் அழைக்கப் பட்டது. இந்திரா காந்தி தலைமை தாங்கிய காங்கிரஸ் சீக்கிரத்தில் உண்மை யான காங்கிரஸாக மாறியது. இந்திரா காந்தி கட்சியிலும் அரசாங்கத்திலும் பெரும் தலைவராக இருந்தார்.

## 1971-ம் வருட பொதுத்தேர்தலும், பிரதமராக மீண்டும் இந்திராவும்

இந்திரா காந்தி சிண்டிகேட்டை முறியடித்தாலும் லோக்சபாவில் அவர் இரண்டு கம்யூனிஸ்ட் க்ட்சிகள், சோசலிஸ்டுகள், திமுக, அகாலிதனம் ஆகிய கட்சிகளின் ஆதரவை நம்பி இருக்கவேண்டியதிருந்தது. அந்தக் கட்சிகள் சில பிரச்சனைகளில் அரசாங்கத்தை ஆதரித்தன. சில பிரச்சனைகளில் எதிர்த்தன.

அதே சமயம் பொருளாதார நடவடிக்கைகளால் இந்திரா காந்தியின் செல்வாக்கு அதிகரித்தது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் காட்டிலும் இரண்டு மடங்கு முதலீட்டில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வெளியிடப் பட்டது. நிலச்சீர்திருத்தங்களை வேகமாக நிறைவேற்ற வேண்டும் என்று மாநில முதலமைச்சர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

இதனால் 1962-லிருந்து இந்தியாவில் ஏற்பட்டிருந்த ஏமாற்றம், அவ நம்பிக்கை, விரக்தி ஆகியவை விரட்டப்பட்டன. கிராமங்களில் ஏழை விவசாயிகளும், நகரங்களில் ஏழைகளும் வர்த்தகர்களும் இந்திராகாந்தியை ஆதரித்தார்கள். மத்திய வர்க்கத்தினரில் ஒரு பகுதியும் ஆதரித்தது.

இச்சூழ்நிலையில் போதிய மெஜாரிட்டி இல்லாமல் கட்சி நடத்துவதை விட பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தலைச் சந்திக்க இந்திரா முடிவு செய்தார். 1970 டிசம்பர் 27-ல் ரேடியோவில் இதை அறிவித்தார். அதன்படி பாராளுமன்றத்தைக் குடியரசுத்தலைவர் கலைத்துவிட்டுப் பொதுத் தேர்தலுக்கு உத்திரவிடப்பட்டார்.

ஸ்தாபன காங்கிரஸ், சுதந்திரா, எஸ்.எஸ்.வி. ஆகிய கட்சிகள் கூட்டணி அமைத்துப்போட்டியிட்டன. அந்தக் கூட்டணிக் கட்சியினர் பிரச்சனைகளைப் பற்றி பேசாமல் இந்திராவை ஒழிப்போம் என்று முழங்கினார்கள். இந்திரா காந்தி சோசலிசம், மத சார்பின்மை, ஜனநாயகம், சமூகமாற்றம் ஆகியவை பற்றி பேசினார். ஜனசங்கம் மக்களைப் பிளவுப்படுத்தும் சக்தி என்று தாக்கினார். வறுமையை ஒழிப்போம் என்று முழங்கினார் இந்திரா.

1971-மார்ச் மாதம் நடந்த தேர்தலில் இந்திரா காங்கிரஸ் மகத்தான வெற்றி பெற்றது. மொத்தம் உள்ள 518 இடங்களில் 352 இடங்களைக் கைப்பற்றியது. ஸ்தாபன காங்கிரஸ், சுதந்திரா முதலிய கட்சிகள் படுதோல்வி அடைந்தன. 1971 மார்ச் 18-ல் இந்திராகாந்தி தலைமையில் இந்திரா காங்கிரஸ் மந்திரி சபை பதவி பெற்றது.

காங்கிரஸ் கட்சி மறுபடியும் முதன்மையான கட்சியாக வந்தது. மக்கள் மதம், மொழி, சாதி ஆகிய பிரிவினைக் கடந்து வாக்களித்தார்கள். தேசியப் பிரச்சனைகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டு வாக்களித்தார்கள். ஒரு தேசியத் திட்டத்திற்கு ஆதரவாக ஏழைகளையும் ஒடுக்கப்பட்டவர்களையும் திரட்டினால் அது மாபெரும் சக்தியாக இருக்கும் என்பதை இந்திராகாந்தி நிரூபித்தார். மக்கள் தேர்தல் வெற்றியைக் கொண்டாடிக் கொண்டிருந்த சமயத்தில் தான் பங்களாதேஷ் அரசியல் நெருக்கடி தொடங்கியது.

# 1.3 பங்களாதேஷ் உதயம்
## (BIRTH OF BANGLADESH, 1971)

இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது வரலாற்றுப் புகழ்பெற்ற பல நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அதில் மிக முக்கியமானது 1971 டிசம்பரில் பாகிஸ்தானுடன் நடந்த போரில் மகத்தான வெற்றி பெற்றதுடன், பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்த கிழக்கு பாகிஸ்தானை விடுவித்து, ''வங்காளதேசம்'' என்ற பெயரில் தனி சுதந்திர நாடாக்கியதாகும்.

1947, ஆகஸ்ட் 15-ம் தேதி இந்தியா சுதந்திரம் அடைந்த போது, பாகிஸ்தானும் சுதந்திரம் அடைந்தது. பாகிஸ்தானில் மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் என்று இரண்டு பகுதிகள் இருந்தன. மதம் இரண்டு பகுதிகளையும் ஒன்றுபடுத்தினாலும், மொழி அவர்களை வேறுபடுத்தியது. மேற்கு பாகிஸ்தானில் வசிப்பவர்கள் உருது பேசும் முஸ்லீம்கள், கிழக்கு பாகிஸ்தானைச் சேர்த்தவர்கள் வங்கமொழி பேசும் முஸ்லீம்கள், மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களே எல்லாத் துறைகளிலும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

### முஜிபுர் ரகிமான் வெற்றி

1970-ல் பாகிஸ்தான் பாராளுமன்றத் தேர்தல் நீண்ட இடைவெளிக்குப் பின் நடந்தது. மொத்தமுள்ள 313 இடங்களில் 167 இடங்களைக் கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த முஜிபுர் ரகிமானின் அவாமி லீக் கட்சி கைப்பற்றியது. மேற்கு பாகிஸ்தானைச் சேர்ந்தவரான பூட்டோவின் பாகிஸ்தான் கட்சி 88 இடங்களை கைப்பற்றி இரண்டாவது இடத்திலிருந்தது.

முறைப்படி மெஜாரிட்டி இடங்களில் வெற்றி பெற்ற முஜிபுர் ரகிமான் தான் பாகிஸ்தான் முழுமைக்கும் பிரதமராக வேண்டும். ஆனால் அவர், கிழக்குப் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என்பதால் அவரிடம் ஆட்சியை ஒப்படைப்பதற்குப் பூட்டோவும், மேற்கு பாகிஸ்தானின் இதர தலைவர்களும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அப்போதைய பாகிஸ்தான் அதிபர் யாகியாகான், பூட்டோவுடன் இணைந்து ஆட்சி அமைக்க ஆலோசனை கூறினார். ஆனால் அதற்கு ரகிமான்

ஒப்புக்கொள்ளவில்லை. பாகிஸ்தானில் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டது. மார்ச் 3ம் தேதி பாராளுமன்றம் கூடும் என்று அறிவிக்கப் பட்டிருந்தது. ஆனால் பாராளுமன்றம் குறிப்பிட்ட தேதியில் கூட்டப்படாமல் தள்ளி வைக்கப்பட்டது.

1971 மார்ச் 26ம் தேதி நள்ளிரவு முதல் கிழக்குப் பாகிஸ்தானில் ராணுவம் பயங்கர அடக்குமுறையில் ஈடுபட்டது. முஜிபுர் ரகிமானின் அவாமி லீக் தலைவர்களும், பிரமுகர்களும் கைது செய்யப்பட்டனர். அவரது ஆதரவாளர்கள் சித்ரவதை செய்யப்பட்டனர்.

## அகதிகள்

கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக ஓடிவந்தனர். ஜூன் மாதத்தில் இந்த எண்ணிக்கை ஒருகோடியைத் தொட்டது. இதனால் இந்தியாவுக்கு பெரும் பொருளாதார பிரச்சனைகள் ஏற்பட்டது. இந்த அகதிகள் அஸ்ஸாம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் குடியமர்த்தப்பட்டனர். ஒருகோடிக்கு மேற்பட்டவர்கள் கிழக்கு பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு அகதிகளாக வந்தனர். இதனால் இந்தியாவுக்கு பெரும் பிரச்சனை ஏற்பட்டது. இந்த நிலை நீடித்தால் இந்தியா எதிர் நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று பாகிஸ்தானை இந்திரா எச்சரித்தார்.

## ரஷ்யாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம்

இந்தியாவின் அண்டை நாடான கிழக்கு பாகிஸ்தானில் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக இந்தியப் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டது. எனவே இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி 1971 செப்டம்பர் 2ம் தேதி ரஷ்யாவின் ஆதரவைச் பெற மாஸ்கோ சென்றார். இந்திரா காந்தி ரஷ்ய அதிபர் அலெக்சி கோசிஜினுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் விளைவாக சோவியத் - இந்தியா கூட்டு அறிக்கை வெளியிடப்பட்டது. அறிக்கையின் முக்கிய சரத்துக்களாவன 1 இந்தியாவுக்குள் குடியேறிய கிழக்கு பாகிஸ்தான் அகதி களுக்கு அரசியல் தீர்வு காணவேண்டும். 2. கிழக்கு வங்காள மக்களின் விருப்பங்கள், பறிக்க முடியாத உரிமைகள், சட்ட ரீதியான நலன்கள் ஆகியவற்றுக்கு செவி சாய்க்க வேண்டும் 3. அகதிகள் விரைவாகவும் பாதுகாப்பாகவும் திரும்ப உடனடி நடவடிக்கையில் எடுக்கப்பட வேண்டும். ஆகியவையாகும்.

## பாகிஸ்தான் படையெடுப்பு

அகதிகள் பிரச்சனை காரணமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உறவு சீர்கேடு அடைந்தது. இந்நிலையில் 1971 டிசம்பர் 3-ந் தேதி மாலை இந்தியா மீது பாகிஸ்தான் திடீரென்று தாக்குதல் நடத்தியது. அமிர்தசரஸ், பதன்கோட், ஸ்ரீநகர், ஜோத்பூர், ஜாம்நகர், அம்பாலா, ஆக்ரா ஆகிய நகரங்களில் உள்ள

விமானதளங்கள் மீது பாகிஸ்தான் விமானங்கள் குண்டு வீசின. விமானத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தான் ராணுவத்தினரும் எல்லை நெடுகிலும் சுடத் தொடங்கினர். அது மட்டுமின்றி போர் நிறுத்த எல்லைக் கோட்டைத் தாண்டி காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தான் ராணுவம் நுழைந்தது.

## இந்தியாவின் பதிலடி

பாகிஸ்தான் இந்தத் தாக்குதலைத் தொடங்கிய போது பிரதமர் இந்திரா காந்தி கல்கத்தாவில் இருந்தார். அவரும், வெளியூர்களில் இருந்த மற்ற அமைச்சர்களும் அவசரமாக டெல்லி திரும்பினர். மத்திய அமைச்சரவைக் கூட்டம் இந்திராகாந்தி தலைமையில் நள்ளிரவில் நடந்தது. பாகிஸ்தானுக்குப் பதிலடி கொடுப்பது என்றும், இந்தியாவில் நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி, மேற்குப் பாகிஸ்தானில் உள்ள சர்கோதா, மூரித், மியான்லால், ஹார் முதலிய இடங்களில் உள்ள விமான தளங்கள் மீதும் விமானத் தாக்குதல் நடந்தது. இந்தத் தாக்குதலால், பாகிஸ்தானின் ஏராளமான போர் விமானங்கள் தரையிலேயே அழிக்கப்பட்டன. இதைத்தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் போர் முழு அளவில் மூண்டது.

## கிழக்கு முனையில் போர்

கிழக்கு பாகிஸ்தானில் விடுதலைப் போராட்டம் கட்டுங்கடங்காமல் போகவே பாகிஸ்தான் அதிபர் யாகியாகான் இந்தியாவின் மீது தாக்குதலைத் துவக்கினார். இந்தியாவின் கவனம் முழுவதும் மேற்கு எல்லையிலும், காஷ்மீர் பகுதியிலும் தான் இருக்கும், கிழக்கு பாகிஸ்தானில் இந்தியா தாக்குதல் நடத்தாது என்ற பாகிஸ்தான் அதிபரின் எண்ணம் பொய்யாகியது.

கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள டாக்கா விமான தளத்தில் 20 போர் விமானங்களைப் பாகிஸ்தான் நிறுத்தி வைத்திருந்தது. இந்திய விமானங்கள் குண்டு வீசி, 20 விமானங்களையும் அழிந்தன. விக்ரந்த் என்ற இந்தியப் போர்க்கப்பலைத் தகர்ப்பதற்காக கராச்சியில் இருந்து புறப்பட்டு வந்த காஜி என்ற பெயருடைய பாகிஸ்தான் நீர்மூழ்கிக் கப்பலை இந்திய கப்பல் படை கண்டுபிடித்து அழித்தது. பாகிஸ்தான் கப்பல்கள் கிழக்குப் பாகிஸ்தானுக்கு வரமுடியாதபடி முற்றுகையிடப்பட்டன.

இந்த சமயத்தில் பாகிஸ்தான் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். முஜிபுர் ரகிமானின் ஆதரவாளர்கள் முக்திவாகினி என்ற படையை அமைத்து பாகிஸ்தான் ராணுவத்துடன் போரிட்டனர். கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் சுதந்திரப் போராட்டத்துக்கு ஆதரவு அளிப்பதென்று இந்தியா முடிவு செய்தது. இந்திய ராணுவ வீரர்கள் விமானங்களில் சென்று கிழக்குப் பாகிஸ்தான் தலைநகரமான டாக்காவைச் சுற்றிலும் பாரசூட் மூலம் குதித்தனர். இந்திய

ராணுவத்தினரும், முக்திவாகினி படையினரும் டாக்காவை முற்றுகை யிட்டனர்.

## பாகிஸ்தான் ராணுவம் சரணடைதல்

தளபதி நியாஜி தலைமையில் டாக்காவில் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட பாகிஸ்தான் ராணுவத்தினர் இருந்தனர். இந்திய வீரர்களுடன் போரிட்டால் பாகிஸ்தான் படைகள் அடியோடு அழிவது நிச்சயம் என்பதை தளபதி நியாஜி புரிந்து கொண்டார். எனவே டிசம்பர் 16-ந் தேதி மாலை 4.30 மணிக்கு இந்திய ராணுவத்திடம் சரண் அடைந்தார்.

அதே சமயம் மேற்கு முனையிலும் பாகிஸ்தான் ராணுவத்துக்கு அடிமேல் அடி கிடைத்தது. இன்னும் சில மணி நேரத்தில் லாகூரை இந்திய ராணுவம் கைப்பற்றி விடும் என்ற நிலைமை ஏற்பட்டது. அதனால் போர் நிறுத்தத்துக்கு யாகியாகான் சம்மதித்தார். டிசம்பர் 17-ம் தேதி மேற்கு முனையிலும் போர் ஓய்ந்தது.

## வங்காளதேசம் உதயம்

1971-ல் இரண்டு வாரங்கள் நடந்த இந்தியா பாகிஸ்தான் போரில் இந்தியாவுக்குக் கிடைத்த வெற்றி, பிரதமர் இந்திரா காந்தியின் புகழையும், மதிப்பையும் உலக அரங்கில் உயர்த்தியது. அவருடைய ராஜதந்திரத்தால், கிழக்குப் பாகிஸ்தான் விடுவிக்கப்பட்டு வங்காளதேசம் என்ற பெயரில் புதிய சுதந்திர நாடாகியது.

## டெல்லியில் ரகிமான்

வங்காளதேசம் சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டதும், பாகிஸ்தான் சிறையில் இருந்த முஜிபுர் ரகிமான் விடுதலை செய்யப்பட்டார். அவர் வங்காளதேசத்துக்குச் செல்லும் வழியில், டெல்லி விமான நிலையத்தில் பிரதமர் இந்திரா காந்தியும் மற்ற அமைச்சர்களும் அவரை வரவேற்றனர்.

பின்னர் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் முஜிபுர் ரகிமான் பேசுகையில், வங்காள தேசத்துக்குச் சுதந்திரம் கிடைக்க இந்திராகாந்தி செய்த உதவிக்கு நன்றி தெரிவித்தார். இந்திரா காந்தி, இந்திய தேசத்துக்கு மட்டுமல்ல, மனித குலத்துக்கே தலைவி என்று புகழ்ந்தார்.

இந்திரா காந்தி பேசுகையில், ரகிமானின் உடலைத்தான் பாகிஸ்தானில் சிறை வைத்தார்கள். அவருடைய ஆன்மாவை சிறை வைக்க முடியவில்லை. அதனால் தான் வங்காளதேச மக்கள் எழுச்சியுடன் போராடி, தங்கள் நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றனர் என்று குறிப்பிட்டார். ரகிமான், வங்காள தேசம் சென்று, அந்த நாட்டின் அதிபரானார். பாகிஸ்தான் பிரதமராக பூட்டோ பதவி ஏற்றார்.

## போர் சேதங்கள்

போரில் பாகிஸ்தானுக்கு ஏற்பட்ட சேதங்கள் ஏராளம். கிழக்கு பாகிஸ்தானை (வங்காள தேசத்தை) பறிகொடுத்துடன் காஷ்மீரில் 374 சதுர மைலையும், பஞ்சாபில் 374 சதுர மைலையும் சிந்து கட்சு பகுதியில் 4,745 சதுர மைல் பிரதேசத்தையும் இழந்திருந்தது.

அத்துடன் 246 டாங்கிகள், 94 விமானங்கள், 2 போர்க்கப்பல்கள், 2 நீர் மூழ்கி கப்பல்கள் ஆகியவற்றை இழந்தது. உயிர் சேதம் பற்றிய விவரத்தை பாகிஸ்தான் அறிவிக்கவில்லை. எனினும் இந்தியாவுக்கு ஏற்பட்ட சேதத்தை விட பன்மடங்கு அதிகம் என்று கருதப்படுகிறது. இந்தியா 73 டாங்கிகளையும், 45 விமானங்களையும் இழந்தது. 3,238 இந்திய வீரர்கள் கொல்லப்பட்டனர். 617 பேர் போர்க் கைதிகளாக சிறைபிடிக்கப்பட்டனர்.

## சிம்லா ஒப்பந்தம்

1971-டிசம்பர் 3-ம் தேதி ஆரம்பித்த இந்தியா பாகிஸ்தான் போர் டிசம்பர் - 16ல் முடிவுக்கு வந்தது. அதையடுத்து பிரதமர் இந்திரா காந்தியும் பாகிஸ்தான் பிரதமர் பூட்டோவும் 1972 ஜூன் மாத இறுதியில் சிம்லாவில் சந்தித்துப் பேசினார்கள். ஐந்து கட்டங்களாக நடைபெற்ற பேச்சு வார்த்தையில் உடன்பாட்டு ஏற்பட்டது. சிம்லா ஒப்பந்தம் 1972-ஜூலை 2-ம் தேதி கையெழுத்தாகியது.

இந்த உடன்படிக்கைப்படி இந்திய ராணுவம் பிடித்திருந்த 9000 சதுர கிலோ மீட்டார் பிரதேசத்தை பாகிஸ்தானிடம் ஒப்படைக்க இந்தியா ஒத்துக் கொண்டது. இந்தியாவும் பாகிஸ்தானும் மோதலைத் தவிர்த்து நிலையான அமைதியை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். ஒருவர் மற்றவர் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கூடாது. காஷ்மீரில் இப்போதுள்ள எல்லைக் கோட்டை மீறுவதில்லை என்று பாகிஸ்தான் உறுதியளித்தது. 93,000 போர்க் கைதிகளை பாகிஸ்தானிடம் ஒப்படைக்க இந்தியா உறுதியளித்தது. 1973 ஆகஸ்ட் மாதம் பாகிஸ்தான் பங்களாதேஷ் அரசை அங்கீகரித்தது. இந்திரா காந்தி புகழியின் உச்சியில் இருந்தார்.